மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 3 சுற்றம் : 10 அக்டோபர் 2015 விலை : ரூ.10/- ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி



## பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமனுக்கு மூத்த தமிழறிஞர் விருது

NEW

# FLAT FOR SALE @ BESANT NAGAR

## 4 - in -one luxury Apartment



Site at :

49, MGR Salai,
**Kalashetr**a Colony,
Besant Nagar,
Chennai.

Suresh & Co.
Engineers & Builders

#22, Ponniamman Koil Street Urur, Adyar, Chennai - 20.

ph:044-24463149
94440 18004
94440 48902

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly october 2015

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** பி.ஏ.,
**நாராயணன்**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**ஜான்டேவிட்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
V.**கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**

அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

கொலைகாரனிடமே நீதி விசாரணை.... 4

பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்களுக்கு
தினத்தந்தி வழங்கிய மூத்த தமிழறிஞர் விருது.... 6

மாட்டுக்கறியும் மதவெறியும்
வேர்மகள்.... 9

யூதர்களின் சாமார்த்தியம்
அமல்ராஜ்.... 11

எங்கள் மண்
தரா.கார்த்திகை.... 14

மகிழ்ச்சியில் திளைக்க வேண்டும்
அகத்திணை இயல் ஆய்வுக்கவிதை
பாவலர் சீனி. சுந்தரமூர்த்தி.... 17

சென்னை உயர்நீதிமன்றத்தில்
தமிழ் வழக்காடு மொழி.... 19

தமிழகச் சட்டமன்றத்தில்
ஈழத்திற்கு ஆதரவான தீர்மானம்.... 20

தேசம் (கவிதை).... 21

மதிக்கும் பண்பு
ரஞ்சித்.... 23

நடிகர் சங்க தேர்தல் அறிக்கை
சவால்ராம்.... 25

உண்மையைத் தேடி (12)
இராஜாசிங்.... 28

பாடலாசிரியர் கவிபாஸ்கர் திருமணம்.... 34

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் “mutram” என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



இலங்கைக்குள்ளேயே விசாரணை, வெளி நாட்டு நீதிபதிகள், சட்டநிபுணர்கள் கலந்து கொள்வார்கள் என்று ஐ நா கூறியது. ஆனால் இலங்கை அதிபர் என்ன சொல்கிறார் தெரியுமா? வெளிநாட்டினர் கலந்து கொள்ள மாட்டார்கள். உள்நாட்டு நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் தான் பங்குபெறுவார்கள். என்று கொக்கரிக்கிறார். தமிழினத்தைக் கொன்ற இராசபக்சே அமைச்சரவையில் இருந்தவராயிற்றே! தம்மினத்தைக் காட்டிக் கொடுப்பாரா? தமிழினத்தை அழிக்காமல் விடுவாரா?

இலங்கை அதிபரின் அந்தப் பேச்சுக்கு, ஐ நாவை அவமதித்த அந்தப் பேச்சுக்கு ஐ நா என்ன எதிர்வினையாற்றியது? ஒன்றுமில்லை. உலக அளவில் தமிழினம் என்றால் ஒரு பொருட்டல்ல என்பது போல் ஆகிப்போய்விட்டது. காரணம், தமிழகம், தமிழர்கள் என்றும் சொல்லலாம். தமிழினப் படுகொலைகள் நடக்கும்போது அதைத் தடுப்பதற்குப் போதுமான எதிர்ப்புகள் தமிழகத்தில் எழவில்லை. அந்தப் படுகொலைகளை நிறுத்துவதற்கான எந்தவித செயல்பாடுகளையும் தமிழகக் கட்சிகள் செய்யவில்லை. ஏதோ சில தமிழ் அமைப்புகள் தங்களால் இயலாவிட்டாலும் நாவறள கத்திக் கொண்டிருந்துவிட்டு களைத்துப் போய் விடுகின்றன.

2009 வரை தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமையிடம் பஞ்சப்பாட்டுப் பாடியும் தமிழகத்தில் உங்களுக்காக மிகப்பெரிய செயல்களை எல்லாம் செய்து விடுகிறோம் என்று கூறியும் மிகப்பெரும் தொகையை வாங்கிய கட்சிகள் எல்லாம் ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடாமல் தங்களது நலன்களையும் பலன் களையும் மனதில்

# கொலைகாரனிடமே நீதி விசாரணை!



கொண்டு வாழ்ந்துவிட்டார்கள். வாழுகிறார்கள். இன்றும் புலம் பெயர்ந்த தமிழீழ மக்களிடம் இருந்து பணத்தை ஏதேதோ செய்கிறோம் என்று சொல்லி தமிழகத்தில் அரசியல் நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். படேல் சாதி இளைஞன் சாதாரண இடஒதுக்கீட்டுக்காக குசராத் மாநிலத்தையே அசைத்துக் கொண்டு இருக்கிறான். ஆனால் ஈழத்தில் சாதி பாராது மொத்த தமிழனுக்கும் ஆபத்து என்கிற போது தமிழகத்தில் எந்த வித சலனமும் இல்லாமல் இருந்ததுதான் உலக அதிசயமாக இருந்தது. அதன் தொடர்ச்சிதான் அமெரிக்கா கொலைகார இலங்கைக்கு ஆதரவு, இன்னபிற நாடுகளும் ஆதரவு, ஐ நா வே ஆதரவு என்ற முடிவு வெளிவந்ததன் பின்னணி.

தமிழகத்தின் இருபெரும் கட்சிகளும் என்ன செய்தன. கடிதங்கள் எழுதின, தீர்மானங்கள் போட்டன. அவ்வளவுதான். அவைகளால் என்ன பயன்? இதுவரை ஒன்றுமில்லை. சில அப்பாவித் தமிழர்கள் இந்தத் தீர்மானங்களும் கடிதங்களும் மலையைப் புரட்டிப் போடப்போகின்றன என நினைத்து, அந்தக் கட்சிகளுக்கு வாக்களித்துவிட்டு அவர்கள் வாழாவெட்டியாகிப் போனதுதான் மிச்சம். அவர்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கி றார்கள்.

இலங்கைச் சிக்கல் தொடர்பாக ஒவ்வொரு முறையும் பசுமைத்தாயகம் சார்பில் அன்புமணி இராமதாசோ, வழக்கறிஞர் பாலுவோ, பசுமைத் தாயகம் அருளோ பன்னாட்டு அவைக்குச் சென்று ஈழத்தமிழர்களுக்காக வாதிட்டு வருவது மனதிற்கு கொஞ்சம் ஆறுதலாக இருக்கிறது. இந்தக் கட்சி தமிழீழ இயக்கங்களால் பணம் பெற்ற கட்சி அல்ல. புலம் பெயர்ந்த தமிழீழ மக்களால் பயன்பெறும் கட்சியும் அல்ல, ஆனாலும் தமிழர் என்ற ஒரு உறவுக்கு கொடுக்கிற மதிப்பு என்பது பாராட் டத்தகுந்தது. இது போல் தமிழ், தமிழர் என்று வீரவசனம் பேசும் கட்சிகளும் அமைப்பு களும் ஐ நா சென்று அழுத்தம் கொடுத்திருந்தால் ஏதாவது நல்லது பிறந்திருக்குமே, செய்யாது விட்டு விட்டார்களே என்ற மன அமைதி குலைக்கும் நினைவுகள் தமிழர்களின் மனங்களில் மண்டிக்கிடக்கிறது.

மிஞ்சி இருக்கின்ற தமிழர்களையாவது பாதுகாத்திட வேண்டும். அரசியலுக்குள் புகும் எல்லா கட்சிகளும் அமைப்புகளும், தமிழினம் உலகத்தால் நிராகரிக்கப்படுவதை பார்த்துக் கொண்டிருப்பது என்பது நமக்கு நாமே பிணக்குழி வெட்டும் கதையாகத்தான் முடியும். ஒரு காலத்தில் நாடே இல்லாத இஸ்ரேல் இப்போது உலகத்தையே தனது அதிகாரத்திற்குள் வைத்திருக்கிறது. அவர்களுக்கு தமிழர்கள் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல. நாமும் அதை அடைவோம். தமிழருக்கென்று ஈழத்தில் தனி நாடு அடைவோம் என்ற அந்த தீப்பொறி ஒவ்வொரு உண்மையான தமிழரின் நெஞ்சுக்குள்ளும் கனன்று கொண்டுதானிருக்கிறது. அது அவியாத நெருப்புப்பொறி! தமிழீழத்தில் தமிழர் வாழ்வுக்கு விளக்கேற்றும் வெளிச்சமாக விடியும் என்பது மட்டும் உண்மையிலும் உண்மை. ●


## முற்றம் இதழுக்கான விளம்பரக் கட்டணங்கள்

பின்னட்டை பல வண்ணம் ரூ. 10,000/-
பின் உள் அட்டை பல வண்ணம் ரூ. 7,000/-
கருப்பு வெள்ளை முழுபக்கம் ரூ. 5,000/-
கருப்பு வெள்ளை அரைப் பக்கம் ரூ. 2500/-
க. வெ. கால் பக்கம் ரூ. 1500/-

சந்தா விவரம்: தனி இதழ் ரூ. 10/-
ஆண்டு சந்தா ரூ. 120/-


# பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களுக்கு தினத்தந்தி வழங்கிய மூத்த தமிழறிஞர் விருது

தினத்தந்தி நிறுவனர் தமிழர்தந்தை சி.பா.ஆதித்தனார் நினைவாக, ஆண்டுதோறும் அவருடைய பிறந்தநாளையொட்டி இலக்கியப்பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான இலக்கியப்பரிசளிப்பு விழாவும், சி.பா.ஆதித்தனாரின் 111வது பிறந்தநாள் விழாவும் தினத்தந்தி சார்பில் சென்னை, ராணி சீதை மன்றத்தில் நடந்தது.

விழாவுக்கு சென்னை ஐகோர்ட்டு நீதிபதி வெ.ராம சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். தினத்தந்தி இயக்குனர் சி.பாலசுப்பிரமணியன் ஆதித்தன் வரவேற்றார்.

இந்த ஆண்டுக்கான சி.பா.ஆதித்தனார் மூத்த தமிழ் அறிஞர் விருது வா.மு.சேதுராமனுக்கு வழங்கப்பட்டது. அவருக்கு சென்னை ஐகோர்ட்டு நீதிபதி வெ.ராமசுப்பிரமணியன் பொன்னாடை அணிவித்து ரூ.3. லட்சத்துக்கான காசோலையையும், விருதையும் வழங்கினார்.

அனைவரையும் வரவேற்று தினத்தந்தி இயக்குனர் சி.பாலசுப்பிரமணியன் ஆதித்தன் பேசுகையில், இந்த ஆண்டு மூத்த தமிழ் அறிஞர் விருதைப் பெறுபவர், தமிழுக்காகப் பாடுபடுவதையே லட்சியமாகக் கொண்டுள்ள பெருங்கவிக்கோ வா.மு.சேது ராமன். சிறந்த கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர், உலக நாடுகள் அனைத்திலும் சுற்றுப்பயணம் செய்து, தமிழின் பெருமையை முழங்கி வருகிறார். கவிதைகள், காப்பியங்கள், பயண இலக்கியங்கள், மொழி பெயர்ப்பு என்று பல்வேறு துறைகளில் 100க்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியவர். என்றார்.



பரிசளிப்பு விழாவில் மூத்த தமிழ் அறிஞர் விருது மற்றும் ரூ.3 லட்சம் பெற்ற பெருங்கவிக்கோ வா.மு.சேது ராமன் பேசியதாவது:

அய்யா சி.பா.ஆதித்தனாரின் உள்ளக்கிடக்கை வாழ்க்கை ஒவ்வொரு தமிழனும் அறிந்து

கொள்ளக்கூடிய, நடைமுறைப் படுத்தக்கூடிய ஒப்பற்ற வாழ்வு நெறியாகும். அவரின் உன்னத மான உழைப்பே அவரை உயரச் செய்தது. தொழிலா ளருடன், தொழிலாளராக வாழ்ந்து பத்திரிகையை உயர்த்திக்காட்டினார். நான் பார்த்த வரையில், தினத்தந்தி குடும்ப உறவு போல் எந்த பத்திரிகை யிலும் பார்க்க முடியாது.

எத்தனையோ இடர்பாடுகளை கடந்து தினத்தந்தி இன்று உயர்ந்து நிற்கிறது. பத்திரிகை நடத்தும்போது ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க கையில் பணம் இல்லை என்ற நிலையில், சேட்டிடம் வெற்றுப் பேப்பரில் கையெழுத்திட்டு பணம் பெற்று ஊழியர்களுக்கு வழங்கி மகிழ்ச்சியாக அனுப்பிவைத்தார். தான் வேறு, தொழிலாளர்கள் வேறு என்று அவர் ஒருபோதும் நினைத்தது இல்லை.

காகிதம் கிடைக்காத காலத்தில் தொழி லாளர்களுடன் சேர்ந்து காகித கூழ் காய்த்து, காலை முதல் மாலை வரை அதை காகிதமாக மாற்ற உழைத்தார். தமிழுக்காகவும், தமிழர்களுக்காகவும் பத்திரிகை நடத்தினார். தினத்தந்தி அரசியல் மாற்றத்திற்கு மிகப்பெரிய கருவியாக இருக்கிறது. உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு என்று வாழ்ந்தவர். அந்த வாக்கியத்தை அறிமுகப்படுத்தி யவர். ஆதித்தனாரிடம் இருந்து விடாமுயற்சியை நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

தன் கோட்பாட்டில் உறுதியோடு வாழ்ந்தார். தமிழர் என்று சொன்னால் சி.பா.ஆதித்தனார் தான் முன் நிற்கிறார். தமிழுக்கும், தமிழர்களுக்கும் உச்சமான தலைவர் சி.பா.ஆதித்தனார். எங்களுக்கு பரிசளிக்கும் செய்தியை தினத்தந்தியில் முதல் பக்கத்தில் 8 கால செய்தியாக வெளியிட்டிருந் தார்கள். இதைவிட தமிழ் மொழியின் படைப்பாளர்களுக்கு வேறு என்ன பெருமை கிடைக்க முடியும். எங்களுக்கு இவ்வளவு பெரிய புகழை தந்த தினத்தந்திக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். தமிழ் மொழியை வளர்க்க தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் பாடுபட்டது போல எல்லா தலைவர்களும் தைரியமாக வெளியே வந்து போராட வேண்டும்.

எதைச்செய்தாலும் தமிழ், தமிழ் என்று அய்யா வாழ்ந்தார். அவர் நடத்திய இதழுக்கு பெயர் தமிழ். அவர் அமைத்த இயக்கம் நாம் தமிழர், தாய் இல்லத்துக்கு பெயர் தமிழன் இல்லம். அவர் வெளியிட்ட பதிப்பகத்துக்கு பெயர் தமிழ்த்தாய் பதிப்பகம். அவர் அமைத்த இரண்டு இயக்க அமைப்பு பெயர் இளந்தமிழர், மகளிர் தமிழ்மன்றம். எழுதிய நூல் தமிழ்ப் பேரரசு.

அவருடைய தமிழ் உணர்ச்சிதான் எங்களைப் போன்றவர்களுக்கு உந்துதலை தந்தது. தமிழ் மக்கள் மானத்துடன் வாழவேண்டும். பசி, பட்டினி இல்லாமல் வாழ வேண்டும் தமிழ் உணர்வோடு வாழ வேண்டும் என்பதற்காக சி.பா.ஆதித்தனார் பாடுபட்டார்.

ஒருமுறை அய்யா அவர்களை பார்க்க ஒரு நடிகர் வந்தார். அவர் உள்ளே வரும் போதே தமிழ் வாழ்க என்றார். உடனே அய்யா அவர்கள் தமிழ் எப்போதும் வாழும். அதை யாரும் அழிக்க முடியாது. ஆனால் தமிழ் வென்றதா? என்றுதான் பார்க்க வேண்டும். அதனால் தமிழ் வெல்க என்று சொல்லுங்கள் என்று அன்றே சொன்னார். அவரிடம் மட்டுமல்லாமல் எப்போதுமே தமிழ் வாழ்ந்தால் மட்டும் போதாது. தமிழ் வெல்லவேண்டும் என்பதை அய்யா அவர்கள் சொல்வார். அதையே தினத்தந்தி தலைப்பின் கீழே வெல்க தமிழ் என்று பிரகாசமாகிறது.

இன்றைய இளைஞர்கள் சி.பா.ஆதித்தனாரின் வாழ்க்கை வரலாற்றைத் தெரிந்துகொள்ளும் வகையில் மலிவு பதிப்பாக வெளியிடவேண்டும் என்று நான் கோரிக்கை வைக்கிறேன். சி.பா.ஆதித்தனாரின் தியாகத்தை தினத்தந்தி எப்போதும் காப்பாற்றும். தினத்தந்தி ஒரு பல்கலைக்கழகம். அஞ்சல் வழிக்கல்வி திறந்தவெளி பல்கலைக்கழகம்போல தமிழை வளர்க்க அன்று முதல் தினத்தந்தி பாடுபட்டு வருகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

(சென்னையில் நடைபெற்ற தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் இலக்கிய பரிசளிப்பு விழாவில், மூத்த தமிழறிஞர் விருது பெற்ற பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் படித்த கவிதை)

வியப்பின் வியப்பாம் வினைதேர் மாட்சி
நயத்தகும் ஆளுமை நாட்டம் – உயர்ந்த
செயல்வீச்சின் ஆற்றல் செந்தமிழ்க்கோ லோச்சோம்
இயக்கமா தித்தர் இருப்பு!

இருப்பதாம் செல்வம் இருப்பாக்கி மேலும்
திருப்பதாம் சேர்க்கும் திறமை வளர்ப்பாருள்
இருக்கும் இருப்பையும் ஈந்து தமிழர்
வருத்தம் தீர் ஆதித்தர் வாழ்த்து!

சிந்தனைச் சிற்பி செயலரிமா பேருழைப்பால்
உந்தி முதன்மை உயிர்ப்பிக்கும் – செந்தமிழ்க்கோ
நந்தவனம் தென்றல்தான் நன்றுநுழைந் தேவரல்போல்
விந்தைஆ தித்தர்வெல் வேந்து!

ஆங்கிலக் கல்விலண்டன் ஆய்ந்தாய்ந்தே தேய்ந்தும்நம்
தாங்குதமிழ் தாய்மண் தனித்தியங்க – வீங்குவளம்
சேர்த்தபொருள் எல்லாம் செலவுசெய்து நம்தமிழர்க்(கு)
ஆர்த்தஆ தித்தர் அறம்!

முகவரியைத் தான்தொலைத்த மூத்த இனம் நம்மின்
தகவுதமிழ்த் தம்மினத்தின் சான்றுகள் – மிகமிகவே
வையகம் காண வரம்பெற்ற ஆதித்தர்
கையகம் தந்ததமிழ்க் காப்பு!

பாமரர் தாமும் படிக்கத் தினத்தந்தி
தேமதுர மாகத் திகட்டாதே – மாததுரம்
நன்றுநாத் தான்தடவி நாடெல்லாம் தீந்தமிழ்
சென்றிடச்செய் ஆதித்தர் தீர்ப்பு.

உரிமை முழக்கம் உயர்த்திப் பிடித்தார்
சரிசம வாழ்வைச் சமைத்தார் – எரிமலை
வெடித்தபோல் தீமை விரட்டினார் நன்றேபோல்
நடித்தார்க்கே ஆதித்தர் நஞ்சு!

நஞ்சையும் நல்லமுதாய் நாயகர் ஆதித்தர்
வஞ்சமிலாத் தன்னன்பால் மாற்றியே – விஞ்சுபல
ஆக்கம் தமிழர் அறிவார் நிலைஉயர்த்தும்
தாக்கமா தித்தர் தவம்!

துணிவும் பணிவும் கனிவும் தெளிவும்
அணியமாய்த் தேர்ந்த அயர்வில்லா உன்னதத்தின்
உன்னதம்நம் ஆதித்தர் ஓங்குலகெ லாம்தமிழர்
மன்பதைஉய் வித்தார் வணங்கு!

மாற்றிய மாற்றம் மதிப்பிழந்தே போகாமல்
ஏற்ற மறுமலர்ச்சி ஏற்றமுறக் – கூற்றுவனும்
அஞ்சுமா தித்தர் அருந்தொண்டைப் போற்றிடுவோம்
துஞ்சாதே வெல்வோம் துணிந்து!

தமிழர்போ ராளிநம் தண்டாமிழா தித்தர்
அமிழ்தம் தினத்தந்தி அள்ளி – இமிழ்கடல்சூழ்
வையகம் நற்றமிழ் வாகைமுடி சூடிடவே
கையகம் உய்வோம் களம்!

நன்றுநோபல் அப்பரிசு யாம்பெற்ற இன்பம் போல்
இன்றுதினத் தந்திதரும் இப்பரிசு! – வென்றிமிகும்
வெல்கதமிழ் ஆதித்தர் மேன்மேல் தினத்தந்தி
நல்லுலகு விஞ்சுமிதை நம்பு!

தலைமுறைகள் வாழ்க! தமிழ்த் தந்தி ஓம்பும்
நிலைபேறு பாலசுப்பி ரம்மணியர் தாத்தாபோல்
தந்தைபோல் விஞ்சுக தாய்மண் தமிழ்நாடு
விந்தை புரிக வியந்து!

மண்ணுக்(கு) உடலென்றும்! மற்றுயிர்தான்
நம்தமிழ்க்கே!
எண்ணிய எண்ணம் இருந்தமிழ் – விண்ணுயர்த்தும்
தாத்தா ஆதித்தர் தம்தடம் மாறாமல்
மாத்தவமாய் ஓங்குதடி வாழ்த்து!

●

# மாட்டுகறியும் மதவெறியும்

பாரதிய சனதா கட்சி பெரும்பான்மை பலத்துடன் இந்திய ஆட்சியில் அமர்ந்ததிலிருந்து இந்து மதத்தைத் தவிர மற்ற மதத்தினர் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்படுகின் றனர் என்பதைப் பார்க்க முடிகிறது. இதையும் தாண்டி இந்து மதத்தில் இருக்கிற தலித் மக்களும் பிற்படுத்தப்பட்ட மக்களும் பாதிக்கப்படுகின்றனர் என்பதையும் காணும் அவலம் நடந்து கொண்டுதானிருக்கிறது. இதற்கு சாட்சியாகத்தான் லாலுபிரசாத் அவர்கள், இது உயர்சாதிக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்குமான தேர்தல் என்று பீகார் தேர்தலை வர்ணிக்கிறார். ஒரு உயர்சாதி ஆட்சி இந்தியாவில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நடுநிலையாளர்கள் கணிக்கிறார்கள்.

அக்டோபர் ஒன்றாம் தேதி உத்தரப்பிரதேசத்தில் தாத்ரி மாவட்டம் பிசடா என்ற கிராமத்தில் திங்கட்கிழமை இரவு அக்லாப் என்பவர் பசு இறைச்சியை வைத்திருப்பதாகவும் அதை அவர்களுடைய குடும்பத்தினர் சமைத்துச் சாப்பிட்டதாகவும் தகவல் பரவியிருக்கிறது. பிசடாவில் வசிக்கும் மதத்தீவிரவாதிகள், பசுவைக் கொன்றவர்கள் மீது கொலை வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று கூறி பிஸ்ராக் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்தை தடை செய்தனர். தொடர்ந்து காவல்துறையினர் குவிக்கப்பட்டனர். அப்போது ராகுல்யாதவ் என்பவர் சுடப்பட்டார். இந்த நிலையில் 200க்கும் மேற்பட்ட மத வன்முறையாளர்கள் அக்லாப்பின் வீட்டுக்குள் புகுந்து அங்கிருந்தவர்களை கடுமையாகத் தாக்கியிருக்கின்றனர். இதில் அக்லாப் என்பவர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார். இந்தத் தாக்குதலில் அக்லாப்பின் மகன் தானிஷ் படுகாயமடைந்தார். அவரை சிலர் மீட்டு, மருத்துவ



மனையில் சேர்த்திருக்கின்றனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தச் சம்பவம் குறித்து அக்லாப்பின் உறவினர் ஷான் முகம்மது கூறுகையில், இறைச்சிக்காக பசு கொல்லப்பட்டதாக இங்குள்ள ஒரு கோவிலில் அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கிராம வாசிகள் எங்கள் குடும்பத்தை கடுமையாகத் தாக்கினார்கள் என்றார்.

இச்சம்பவம் நாடு முழுக்க பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களை பா ச க உட்பட அனைத்துக் கட்சித் பிரமுகர்களும் சென்று பார்த்து ஆறுதல் கூறிக்கொண்டிருக் கிறார்கள். உத்தரப்பிரதேச முதல்வர் அகிலேஷ் யாதவ் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நாற்பத்தைந்து இலட்சம் நிதி அறிவித்திருக்கிறார். பார்வையாளர் களும் ஊடகத்தினரும் நுழைய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தாத்ரி சம்பவத்தை அரசியல் ஆக்க வேண்டாம் என்று மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் கூறியிருக்கிறார். இது துரதிர்ஷ்டவச மானது, மதச்சாயம் பூச வேண்டாம் என்கிறார். இவர்கள் எதை வேண்டுமானலும் செய்வார்கள். அதை பெரிதாக எடுத்துக் கொள்ளக்கூடாதாம். இதைப் போல் இதுவரை பல துரதிர்ஷ்டம் நடந்திருக்கிறது. இன்னும் நடக்கும், அவைகளையும் இவர்கள் இப்படியே சொல்வார்கள். இந்து உயர்சாதி என்று சொல்லிக்கொள்கிற சில தீவிர வாதிகள் இதைச் செய்து கொண்டே இருப்பார்கள். அதை அரசு துரதிர்ஷ்டம் என்று சொல்லிக் கொண்டே இருக்குமானால், இந்தியா எப்படி மக்களாட்சி நடக்கிற நாடாக இருக்க முடியும்?

எல்லா மதத்தினரும் அன்பாக, அமைதியாக வாழ வேண்டும் என்று எண்ணுகிற மனிதர்கள் இம்மாதிரியான செயல்பாடுகளைக் கண்டு மனம் புழுங்கிக்கொண்டிருக்கிறன்றனர். ஆளுகிற அரசுகள் பாரபட்சம் பாராமல் நடவடிக்கைகள் எடுத்து மனித மனங்களை சமநிலைக்குக் கொண்டு வர வேண்டும். தவறுகிற பட்சத்தில் இம்மாதிரியான நிகழ்வுகள் பெரும் பாதிப்புகளை எற்படுத்தும் என்பது மட்டும் நிச்சயம்.

**வேர்மகள்**

# ஆப்பிள்!?




ஆப்பிள் மேல் ஒட்டப்பட்டிருக்கும் sticker சொல்லும் செய்தியை நாம் தெரிந்து கொள்வது மிகவும் அவசிய மான ஒன்றாகும்.

1. PLU code ல் 4 எண்கள் இருந்தால் – முழுக்க வேதி உரம் கலந்து விளைவிக்கப்பட்ட ஆப்பிள் என்பது பொருள்.

2. PLU code ல் 5 இலக்கம் இருந்து அது 8 என ஆரம்பித்தால் அது மரபணு மாற்றம் செய்யப்பட்டது.

3. PLU code ல் 5 இலக்கம் இருந்து அது 9 என ஆரம் பித்தால் அது முழுக்க முழுக்க இயற்கையாக விளைந் தது.

இவைகளை நாம் கவனத்தில் கொண்டு ஆப்பிள் வாங்குவது நல்லது. ஸ்டிக்கர் சொல்கிற செய்தியைத் தெரிந்து கொண்டு வாங்கினாலும் அந்த ஸ்டிக்கரை எடுத்துவிட்டுத்தான் சாப்பிட வேண்டும். இது தவிர ஆப்பிளில் மெழுகு தடவப்பட்டு விற்பனைக்கு வருகிறது என்ற செய்தியையும் தருகிறார்கள்.

எச்சரிக்கையாக இருப்பது ஒவ்வொரு நுகர்வோரின் உடல் நலன் பாது காப்பாகும்.

**க. பவானி**

யூதர்கள் எவ்வாறு சாமர்த்தியசாலிகளாக இருக்கிறார்கள்?

தொழில்நுட்பம் இசை, விஞ்ஞானம் என்று எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் யூதர்கள் முன்னணியில் இருக்கிறார்கள் என்பதை எவருமே மறுக்க முடியாது.

உலக வர்த்தகத்தில் கிட்டத்தட்ட 70% யூதர் களின் கைவசமே உள்ளது. உயர் தொழில் நுட்பம், அழகு சாதனங்கள், நாகரிக உடைகள், உணவுப் பொருட்கள், ஆயுதங்கள், சினிமாத் துறை (ஹாலி வுட் மற்றும் பல) என்று பலவற்றிலும் யூதர்கள் சிறந்து விளங்குவது 100% உண்மை நான் இஸ்ரேல் நாட்டில் சுமார் 3 ஆண்டுகள் சில மருத்துவ மனைகளில் உள்ளகப் பயிற்சிக்காக கழிக்க நேர்ந்த போதுதான் ஏன் யூதர்கள் அதி சாமர்த்தியசாலி களாக இருக்கிறார்கள் என்பது பற்றி ஆராயும் எண்ணம் வந்தது.

ஏன் கடவுள் அவர்களுக்கு மட்டும் இந்தத் திறமைகளைக் கொடுத்தார்? இந்தத் திறன் தற் செயலாக வந்ததா? அல்லது ஒரு தொழிற்சாலை யில் நாம் நமக்கு வேண்டிய வடிவில் ஒரு பொருளை உற்பத்தி செய்கிறோமே, அதுபோல இந்த திறமையை மனித முயற்சியால் சிருஷ்டி பண்ணிக் கொள்ள முடியுமா? இந்தக் கேள்விகள் எனது 2 ஆம் ஆண்டில் அதாவது 1980 டிசம்பரில் நான் கலிபோர்னியா திரும்ப வர இருந்தபோது என் மனதில் தோன்றிக் கொண்டே இருந்தன. எனது ஆய்வறிக்கைக்காக யூதர்கள் உட்கொள்ளும் உணவு, கலாச்சாரம், பண்பாடு, மதம், வாழ்க்கை முறை என்று எல்லா விவரங்களையும் ஒன்று விடாமல் துல்லியமாகச் சேர்ப்பதற்கு 8 ஆண்டுகள் பிடித்தன. இந்த விவரங்களை மற்ற இனங்களுடன் ஒப்பிட்டு பார்க்க முடிவு செய்தேன். இங்கு கர்ப்பிணிகள் தங்களை தயார் செய்து கொள்ளும் விதமே தனி. தனக்குப் பிறக்கப் போகும் குழந்தை

# யூதர்களின் சாமார்த்தியம்



ஒரு மேதாவியாக இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு கர்ப்பிணி முதலிலிருந்தே தன்னை தயார் செய்து கொள்ளுகிறாள். அவள் எப்போதும் பாடிக்கொண் டும் பியானோ வாசித்துக்கொண்டும் இருப்பாள். கணவனுடன் சேர்ந்து சிக்கலான கணித வினாக் களை விடுவிக்க முயற்சி செய்வாள். தான் போகுமிடமெல்லாம் கணக்குப் புத்தகத்தை விடுவிக்க முயற்சி செய்வாள். குழந்தை பிறக்கும் வரை விடாது கணித புதிர்களை விடுவித்துக் கொண்டே இருப்பாள்.

பாலில் பாதாம்பருப்பு முதலான கொட்டை வகைகளையும் பேரீச்சையையும் கலந்து உண்கிறாள். மதிய உணவுக்கு தலை துண்டிக்கப் பட்ட மீன் பிரெட், பாதாம்பருப்பும், மற்ற கொட்டை வகைகளும் சேர்த்த பச்சைக் காய்கறிக் கலவை ஆகியவற்றை உண்ணுகிறாள்.

மீன், குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு நல்லது என்று நம்புகிறார்கள். கர்ப்பிணிப் பெண் மீன் எண்ணெய் மற்றும் சிவப்பு ஒயின் உட்கொள்ளுவது யூத இனத்தின் கலாச்சார வழக்கம். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் உண்ணும் உணவில் மிகுந்த அக்கறை காட்டுகிறார்கள். பெற்றோர்களின் மேற்பார்வையிலேயே குழந்தைகளின் உணவும் அமைகிறது. முதலில் பழங்கள், பாதாம்பருப்பு, பின், மீன் எண்ணெய் என்ற வரிசையிலுல் குழந்தைகள் உணவு உட்கொள்ளுகிறார்கள்.

ஒவ்வொரு யூதக் குழந்தையும் 3 மொழிகள் ஹீப்ரூ, அரபிக் மற்றும் ஆங்கிலம் அறிந்தவர்களாக இருக்கிறார்கள். குழந்தைப் பருவத்திலிருந்து பியானோ, வயலின் முதலிய இசைக் கருவிகள் இசைக்கத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டியது ஒரு கட்டாயம் இசைக்கருவி வாசிக்கும் பழக்கம் குழந்தைகளின் அதிர்வை அதிகரித்து அவர்களை மேதைகள் ஆக்கும்.

இசை அதிர்வுகள் மூளையை தூண்டிவிட்டு அதன் திறன்பாட்டை அதிகரிப்பதால்தான் யூதர்களிடையே மேதைகள் அதிகம் என்கிறார் ஒரு யூத விஞ்ஞானி. முதல் வகுப்பிலிருந்து 6ஆம் வகுப்பு வரை குழந்தைகள் வணிகக் கணிதவியலை படிக்கிறார்கள். விஞ்ஞானப் பாடம் முன்னுரிமை பெறுகிறது. கலிபோர்னியா குழந்தைகளையும் யூதக் குழந்தைகளையும் ஒப்பிட்டு பார்த்தால் கலிபோர்னியா குழந்தைகள் 6 வருடம் பின் தங்கி இருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

யூதக்குழந்தைகள் வில்வித்தை, துப்பாக்கி சுடுதல் ஆகிய உடல், மனம் சார்ந்த விளையாட்டுக்களில் ஈடுபடுகிறார்கள். இவ்விரண்டு விளையாட்டுக் களும் மனதை ஒரு முகப்படுத்தி துல்லியமான நுட்பமான முடிவு எடுக்க உதவுகின்றன. உயர் நிலைப்பள்ளியில் மாணவர்கள் விஞ்ஞானம் படிக்க அதிகம் விழைகிறார்கள். போர்த்தடவாளங்கள், மருத்துவம், தொழில்நுட்பம் ஆகியவற்றின் செயலாக்கங்கள், புதிதாக பொருட்கள் செய்வது என்று பல்வேறு முறைகளில் தாங்கள் படித்தவற்றை நடைமுறைப்படுத்துகிறார்கள். இந்தத் திட்டங்கள் உயர் கல்வி நிறுவனங்களிலும், பல்தொழில்நுட்ப கழகங்களிலும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. வணிகம் சொல்லித்தரும் ஆசிரியருக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. வணிகவியல் படிக்கும் மாணவர்கள் கடைசி வருடம் ஒரு செயல் முறைத் திட்டத்தை நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டும். 10 பேர்கள் அடங்கிய அவர்களது குழுமத்திற்கு இந்தச் செயல்முறை திட்டத்தில் 10 மில்லியன் யு.எஸ்.டாலர் லாபம் கிடைத்தால் தான் அவர்கள் தேர்வு பெறுவார்கள்.

இந்தக் காரணத்தினாலேயே உலக வர்த்தகத்தில் 50% மேல் யூதர்கள் வசம் இருக்கிறது. உலகப் புகழ்பெற்ற லீவாய்ஸ் பொருட்கள் இஸ்ரேல் பல்கலைக்கழக வர்த்தகம் மற்றும் புதிய பாணி உடை வடிவமைப்பு ஆசிரியர்களால் உருவாக்கப் பட்டதாகும். நியுயார்க்கில் அமைந்திருக்கும் யூதர்களின் வர்த்தக நிறுவனம், யாருக்காவது பயன்தரும் வர்த்தக யோசனை இருந்தால் அவர்களுக்கு வட்டி இல்லாக் கடன் கொடுத்து அவர்களது வர்த்தகம் தழைக்க எல்லா வகையிலும் உதவுகிறது. இதனாலேயே ஸ்டார்பக்ஸ், டெல் கம்ப்யூட்டர்ஸ், கோகோகோலா, ஆரக்கிள், லீவாய்ஸ் டன்கின் போனட், ஹாலிவுட் படங்கள் மற்றும் பல நூற்றுக்கணக்கான வர்த்தகங்கள் இவர்களது

*ஆதரவில் நடை பெறுகின்றன.*

*யூத மருத்துவப் பட்டதாரிகள் நியூயார்க்கில் அமைந்திருக்கும் யூதர்களின் வர்த்தக நிறுவனத்தின் வட்டியில்லாக் கடனைப் பெற்று தனியாக டாக்டர் தொழில் நடத்தலாம். உலகத்தரம் வாய்ந்த பல்கலைக் கழகங்கள் பெரும்பாலும் யூதர்களின் வசம் தான் இருக்கின்றன. உலகிலேயே சிறந்த ராணுவமும், இவர்களிடம் தான்.*

*இஸ்ரவேல் நாட்டின் இன்னுமொரு சிறப்பு, சிகரெட் புகைப்பது இங்கு விலக்கப்பட்ட ஒன்று.*

*சிகரெட்டில் இருக்கும் நிகோட்டின் நமது மூளையின் முக்கியமான திசுக்களை அழித்து? மரபனுக்களையும் வையும் பாதிக்கும். இதன் காரணமாக அடுத்த தலைமுறை அறிவற்றவர் களாகவும் மூளை வளர்ச்சி குன்றியவர்களாகவும் உருவாகக்கூடும் என்பதை தெரிந்து வைத்துள்ளனர்.*

*இஸ்ரவேல் நாட்டைப் போலவே சிங்கப்பூரிலும், சிகரெட் பிடிப்பவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்களாகவே கருதுகின்றனர். இங்கு ஒரு சிகரெட் பெட்டியின் விலை 7 யு.எஸ். டாலர்கள்!*


*ஆனால் இந்தோனேஷியாவைப் பாருங்கள். ஒரு பாக்கெட் சிகரெட்டின் விலை வெறும் 0.70 யு.எஸ்.டாலர்தான் எங்கு பார்த்தாலும் மக்கள் சிகரெட் பிடித்துக்கொண்டு இருப்பார்கள். பலன்? லட்சக்கணக்கான மக்கள் தொகை இருந்தும் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் பல்கலைக் கழகங்கள் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய தொழில் நுட்பமோ, தயாரிக்கும் பொருட்களோ எதுவுமே இல்லை அவர்களிடம்! அவர்களது மொழியைத் தவிர வேறு மொழி தெரியாது.*

*சற்று சிந்தித்துப் பாருங்கள்!!! என்னுடைய ஆய்வறிக்கையில் நான் இனத்தையோ மதத்தையோ குறிப்பிடவில்லை. நம்மால் யூதர்களைப் போன்ற புத்திசாலி தலைமுறையை உருவாக்க முடியாதா?*

**அமல்ராஜ்**

*(முகநூலிலிருந்து)*

## 2015 மருத்துவத்திற்கான நோபல்பரிசு



இந்த ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசுக்கு வில்லியம் கேம்பெல், சதோஷி ஒமுரா, யூயூ தூ ஆகிய மூன்று விஞ்ஞானிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

உருளைப் புழுக்களால் ஏற்படும் யானைக்கால் வியாதி உள்ளிட்ட நோய்களுக்கு புதிய மருந்து கண்டுபிடித்ததற்காக வில்லியம் கேம்பெல், சதோஷி ஒமுரா ஆகிய இருவருக்கும், மலேரியாவுக்கு புதிய மருந்து கண்டுபிடித்ததற்காக யூயூ தூவுக்கும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

வில்லியம் கேம்பெல், சதோஷி ஒமுரா ஆகியோர் இணைந்து கண்டுபிடித்துள்ள 'அவெர்மேக்டின்' மருந்து, உருளைப் புழு ஒட்டுண்ணிகளால் ஏற்படும் யானைக் கால் வியாதி, பார்வையின்மை ஆகிய நோய்கள் தாக்குதவதை மிகப் பெரிய அளவில் குறைத்துள்ளது.

மேலும், ஒட்டுண்ணிகளால் ஏற்படும் பிற நோய்களை யும் திறம்படக் கட்டுப்படுத்தியுள்ளது.

யூயூ தூவால் கண்டுபிடிக்கப்பட்ட 'ஆர்டெமிஸினின்' மருந்து, மலேரியாவால் ஏற்படும் உயிரிழப்புகளை குறிப் பிடத்தக்க அளவில் குறைத்துள்ளது. இந்த இரு கண்டுபிடிப் புகளும், ஆண்டுதோறும் கோடிக்கணக்கான மக்களைத் தாக்கும் நோய்களை எதிர்த்துப் போரிடும் திறனை மனித குலத்துக்கு வழங்கியிருக்கிறது என்று நோபல் பரிசுத் தேர்வுக் குழு திங்கள்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

நோபல் பரிசு 1901-ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இப்பரிசை உருவாக்கிய ஆல்பிரட் நோபல், சுவீடனைச் சேர்ந்தவர். 1833-ம் ஆண்டில் பிறந்தார். வேதியியல், பொறியியல் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவராகத் திகழ்ந்தார்.

டைனமைட் வெடிபொருளைக் கண்டுபிடித்தவர். பெரிய ஆயுதத் தயாரிப்பு நிறுவனத்தையும் நடத்தினார். தனது கடைசி உயில் மூலம் தனது பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளைக் கொண்டு நோபல் பரிசை நிறுவினார்.

அவரது நினைவு தினமான டிசம்பர் 10-ம் தேதி நோபல் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நார்வேயிலும் மற்ற பிரிவுகளுக்கான பரிசுகள் சுவீடனிலும் வழங்கப்படுகின்றன. இயற்பியல், வேதியியல், இலக்கியம், மருத்துவம், பொருளாதாரம், அமைதி ஆகிய பிரிவுகளில் நோபல் பரிசு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவுக்கும் வழங்கப்படும் பரிசுத் தொகை தலா ரூ. 6 கோடியே 20 லட்சமாகும்.

நோபல் பரிசுத் தொகையான 9.5 லட்சம் டாலர்களில் (சுமார் ரூ.6.2 கோடி) ஒரு பாதி வில்லியம் கேம்பெல், சதோஷி ஒமுரா ஆகிய இருவருக்கும், மற்றொரு பாதி யூயூ தூவுக்கும் பிரித்து அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விழுதா! எங்கப்பா சென்று வருகிறாய்? இரக்கம் இல்லாத இருள் எழுந்து கிடக்கிறது. எதுவும் நடக்கலாம் நடக்காமலும் விடலாம். நம்பிக்கை தரும் இரவுகள் எழாத போது, பொழுது சாய முந்தி முற்றத்தில் உன் பேச்சொலி விளைந்திருக்க வேண்டும், இல்லையா விழுதா?

ஆம் வயலே கண்டிப்பாக, கண்டிப்பாக என் பேச்சொலி முற்றத்தில் விளைந்திருக்க வேண்டும். உன் கோபம், உன் காத்திருப்பு, எல்லாமே எனக்குப் புரிகிறது வயலே. வயலே, என் தந்தையின் கண்டிப்பு, அவரது பார்வை, அவரது கோபம் எல்லாமே, எல்லாமே உன்னில் அப்படியே காண்கிறேன். என் தாயின் அரவணைப்பு, அவளது பரிவு, அவளது தகிப்பு, எல்லாமே எல்லாமேதான் வயலே.

வட்டுவான் பாலத்தில் என்தந்தை சுட்டுக் கொள்ளப்படும்வரை, எனக்கு எந்த வலியும் தெரியவில்லை. மரணம், நிரந்தரமான பிரிவு, அதன் சுமை, நீண்ட வலி எதனையும் நான் அறியவில்லை. அப்போது எனக்குப் பத்து வயது. இப்போது பதினாறு ஆகிவிட்டது.

தாயின் மரணம், நெருக்கமான அந்த நீண்ட தெரு, நிம்மதி இழந்து, என் தேசத்தவர் சொந்த நிலங்களை விட்டு அகல மனமின்றி மரண பயத்தோடு பசியின் கொடுமை எழுந்து உயிர் திருக, இரத்த வெடில் எழுந்து மணக்க, இறந்தவர் மண்ணில் விழுந்து போக, நடுவிலே எங்கள் பயணம் தொடர்ந்தது. அப்போதுதான் என் தாயின் கொடிய மரணம் நிகழ்ந்தது. நிகழ்ந்தே போனது.

அந்தக் கோரம், அவளது இறுதிப் பயணம், ஒருக்குறும் வழியில் மரண வெளியில் நிகழ்ந்து போனது. அவளது இறுதிப் பார்வை, சுருங்கிப்போன விழிமடல் ஏதோ ஒன்றைச் சொல்ல

# எங்கள் மண்



எடுத்து, அப்புறம் அப்புறம் என்ன இறுதிப் பார்வையோடு அவளது பயணம் என்னிடம் ஏதும் சொல்லாமலே அங்கே நிகழ்வுற்றது வயலே.

எல்லோரும் போலவே நானும் அந்த மரண வெளியில் அந்தச் சடலங்கள் நிறைந்த மரணப் பாதையில் இருவரையும் படுக்க வைத்துவிட்டு, "அம்மா! இங்கே பார் நீ ஓய்ந்து விட்டாய் இனிமேல் உன்னால் நடக்க முடியாது. ஓர் அடி தானும் எடுத்து வைக்க முடியாது. இனிமேல் என்னோடு பேசமாட்டாய், எனக்கு வழியும் கூறமாட்டாய், ஆறுதலும் கூற மாட்டாய், என் அழகிய கேசத்தை வருட மாட்டாய் இல்லையா அம்மா? நீ ரொம்பக் களைத்துவிட்டாய், உன் தாகத்தை என்னால் தீர்க்க முடியவில்லை, உன்னை என்னால் தூக்கிச் செல்லவும் முடியாது. ஏனெனில், நான் ரொம்பச் சின்னவன்.

ஆனாலும், உன்னைத் தனிமையில் எப்படி நான் விட்டுச் செல்வேன்? நீ ஒருபோதும் தனிமையில், தனிமையிலே இருந்ததே இல்லை இல்லையா அம்மா? உன்னை, நான் இல்லாதபோது இங்கே யார் கவனிப்பார். அதனால், தந்தையை நான் உன்னோடு விட்டுச் செல்கிறேன். என் தந்தை என்னைவிடப் பக்குவமானவர். உன்னை நன்கு கவனிப்பார், இல்லையா அம்மா, உன்னைப்போல தந்தையைப்போல மேலும் இளையவரும் கூட நிறையவே, நிறையவே இவ் நெருக்குறும் வழியில் உள்ளனர். உன் முகத்தை என் சட்டை கொண்டு என ஞாபகமாக மூடியுள்ளேன். சேலையையும் சரி செய்துள்ளேன். கவலைப்படாதே சென்று வருகிறேன் அம்மா.

என்று விடைபெற்று வந்தேன் வயலே. வயலே, உன் சொல்லில் எவ்வளவு அர்த்தம், எவ்வளவு பரிவு, எவ்வளவு அரவணைப்பு, எவ்வளவு கண்டிப்பு, என் தாயைப் போலதான் உன் அரவணைப்பும். இனி எப்போதும் என் பேச்சொலி, பொழுது சாயமுந்தி முற்றத்தில் விளைந்திருக்கும். கவலைப்படாதே.

நாவல் மரப் பக்கமாக உள்ள வேலியை முடிந்தவரை அடைத்தேன். வேலிகள் இல்லை யென்றால் எல்லாமே, எல்லாமே முடிந்துவிடும் வயலே, இல்லையா? ஆம் விழுதா உண்மைதான் வேலியா? நீ மட்டும் அடைத்தால் போதுமா? வேலி அடைப்பதற்கு பெருநிலத்துப் பெருமக்கள் பெருகி வரவேண்டும் விழுதா இல்லையா? ஆம் வயலே உண்மைதான் ஆனால், ஆனால் என்ன? ஏதோ உனக்குள் தொக்கி நிற்கிறது.

எல்லாமே தொக்கி நிற்கிறது. மரணம், இருப்பு, தனிமையில் நீண்ட தூரப் பயணம், எல்லாமே, எல்லாமேதான் தொக்கி நிற்கிறது. உண்மைதான். ஆனால், அண்ணன் இருந்திருந்தால் இப்படியெல் லாம் நடக்குமா? நடந்தே போகுமா? நம்பிக்கை இல்லாத இரவுகள் எழுமா? இரவும் பகலும் தன்பாடில் எழுந்து ஆடுமா? கண்கடை இல்லாமல் நிமிருமா? ஓடிப்போனவன் ஒதுங்காமல் மாற்றா னோடு உக்காந்து வாய்ச் சவடால் விடுவானா? வேலிகளை அடைப்பதற்கு ஊரரார் புறப்பட்டு வருவார். ஒற்றையாய், ஒன்டியாய் நிற்கவேண்டிய தேவையே இல்லை. இல்லையா வயலே? ஆம் விழுதா உண்மையே. வயலே என் அன்புக்குரிய விளைநிலமே! நீ ஒருபோதும் பொய் உரைக்க மாட்டாய் நாம் வாழ நெல்மணி தருபவன் நீ. கஞ்சியும் கூடவே.

வயலே, அண்ணன் என் அண்ணன் என்னை, எங்களை, என் நிலத்தைக் கண்போல காத்தவன் உண்மையாகவே இறந்துவிட்டான்?

இல்லை விழுதா, இல்லவே இல்லை ஒரு போதும் இருக்காது. இருக்கவே இருக்காது. நடந்திருக்கவும் முடியாது. 1987 கொடும் இருள். கொட்டும் மழை, கனத்த பொழுதுகள். மாசி மாதத்துப் பனி மூசிப் பெய்து கொண்டிருந்தது. அப்போது ஆனந்த புளியங்குளத்தில அண்ணன் இறந்ததாகச் செய்தி, புரளி பூமியெங்கும் பரவியது. பக்கத்து வீட்டுக்காரன் பரப்பியது. ஆனால் தொப்புள் கொடி உறவுகள் புரிந்து கொண்டன. எங்களுக்கும் தெரியும், ஆனால் என்ன, ஒரு கணம் ஆடிப்போனோம் இல்லையா?

அப்பால் அண்ணன் வரவில்லையா? வேலிகளை அடைத்து பக்கத்து தொலைந்து போனவன் வாயை அடைக்கவில்லையா? பயிர்கள், கொடிகள், செடிகள் எல்லாம் நீர் பெற்று வளரவில்லையா. வாய்க்காலில் நீரோடி புல்லுக்குமாங்கே பரவவில்லையா?

*ஆம் வயலே உண்மைதான். ஆனால், அமெரிக்கா அப்படியே ஆடுகிறதே. பல்லைக் கூட துலக்காமல் அண்ணன் வாய்க்காலில் கிடந்தான். அது அவன் தான் என்கிறதே இல்லையா வயலே.*

*விழுதா! அமெரிக்கா அடுப்புப்போல அப்பப்போ பற்றவைக்கும், எரிய வைக்கும். இங்கிலாந்து அடுப்பின் விறகு, எரிந்து கொள்ளும், சில சமயம் எரியவைக்கும், எரித்துப் போடும். அவர்களுக்கென்ன அவர்கள் காரியம் நடந்தால் போதும். அதற்காக ஊதி எரிப்பான் சில சமயம் எரிக்காமலும் விடுவான் இல்லையா விழுதா.*

*ஆம் வயலே, உண்மைதான் நீ உரைப்பதில் அர்த்தம் உண்டு. அப்போ வயலில் விளைச்சல் பெறுமா? வாய்க்காலில் நீர் மீண்டும் சலசலத்து ஓடுமா? வேலி, எங்கள் ஊர், ஊர்மனை, அப்பால் நிம்மதியான அறுவடை எல்லாமே நிகழுமா?*

*நம்பிக்கையோடு எங்கள் தெருக்களில் நாங்கள் நடமாட முடியுமா? அச்சம் தவிர்ந்த இரவு எழுந்து அமைந்து நாங்கள் நடமாட முடியுமா? வெள்ளி முளைத்த வெளிப்பில் நிலா நகர, நாங்கள் பயணம் செய்ய முடியுமா?*

*கண்டிப்பாக விழுதா கண்டிப்பாக, காத்திரு. காலம் கனிய வேண்டும். கட்டுக்கடங்காத காட்டேறிகள் கருணையே இல்லாமல் எங்கள் கூரைக்கு நெருப்பு வைக்கும். ஆனால் ஒன்று, மாற்றம் விரைவாக நிகழும். நிம்மதியாக நாங்கள் எங்கள் ஊரில் நிரந்தரமாக இருப்போம்.*

*1987இல் நிகழ்ந்தது போல கண்டிப்பாக நிகழும். அது விரைவாக சீக்கிரமாக நிகழும். வயல், விளைச்சல், அறுவடை, ஆதவன் எழுகை எல்லாம் எல்லாமே கண்டிப்பாக விரைவாக நிகழும் விழுதா, இல்லையா?*

*ஆம் வயலே அது அப்படியே.....*

**தரா. கார்த்திகை.**

*தமிழீழம்*

*(இருப்பு இங்கிலாந்து)*

# பறவைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்



ஆஸ்திரேலியாவில் வசிக் கும் மித்ரா என்ற பறவை ஒன்பது நிறத்தில் தெரியும்.

கடல் புறாக்கள் நீரில் மிதந்து கொண்டே தூங்கும்.

பச்சோந்தியின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும்.

மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவைகள் கொத்தும்.

குவாரின் என்ற பறவை மல்லாந்து தூங்கும்.

புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ. வரை பறக்கும் திறன் படைத்தது.

நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை புறா.

ஒரே சமயத்தில் அதிக முட்டைகளை இடும் பறவை நெருப்புக் கோழி.

மிகப் பெரிய நீர்ப்பறவை அன்னம்.

வெட்டுக் கிளியை வேட்டை யாடும் பறவை மைனா.

வான்கோழிகள் அமெரிக் காவை பூர்வீகமாகக் கொண்டவை.

நியூசிலாந்து நாட்டில் காக்கைகளே கிடையாது.

# மகிழ்ச்சியில் திளைக்க வேண்டும்!
# அகத்திணை இயல் ஆய்வுக்கவிதை

பாவலர் சீனி. சுந்தரமூர்த்தி



உள்ளத்தே எழுகின்ற காதல் நோயால்
உன்னுருவம் என்னெஞ்சில் நிலைத்தி ருக்க
கள்ளவிழிப் பார்வையால் கதைகள் சொல்ல
கருத்தினிக்க இசைபாடும் வண்டின் கூட்டம்
கள்ளிருக்கும் புதுமலரில் தேனை அருந்த
கன்னியுனைப் பார்ப்பதற்கு தனியி டத்தில்
உள்ளமதைக் கொள்ளை கொள்ளும் புன்னை நிழலில்
உன்னெழிலை நான்கண்டு மகிழ வேண்டும்!

இருட்டிருக்கும் இருள்வீட்டில் அசைந்து நிற்கும்
இருள்நெஞ்சு உடலிருக்கும் உணர்வி ருக்கும்
அரும்பிவரும் முல்லைஅவிழ் மொட்டுப் போல
அழகான முத்துப்பல் காட்டி என்னை
வேருடனே கரும்பதனைச் சுவைக்க எண்ணி
வேந்தன்என் இதழினுக்கு முத்தந் தந்து
விருப்பம்போல் சேர்த்தணைக்க இன்பந் தன்னை
விருந்தளிக்க என்னுடனே வாழ வேண்டும்!

அரத்தழுவும் பிள்ளைபோல் அவளும் நெஞ்சுள்
ஆழ்துயரால் விம்முகின்ற வேளை தன்னில்
கொடிதழுவும் கொம்பான தலைவன் நானும்
கொடுந்துயரால் அலமந்து வாடும் பொழுது
பிடிநடையாய் நானுந்தான் பெற்றேன் அத்தான்
பிரிவாற்றலை இடைவிடாது நினைத்துப் புலம்பக்
கொடியிடையாள் நானும் நீயும் எய்துந் துன்பம்
கோடியேனும் தீரநாம் இணைய வேண்டும்!

எதிர்காலம் தனைநினைத்தே வீணாய்க் கலங்க
எஞ்ஞான்றும் அச்சத்தால் இருக்கும் பயத்தால்
பொதிந்துள்ள துயரத்தால் அவளின் உடம்பு
பொலிவிழந்து பசலை நோயால் வாடும் நிலையில்
மேதினியில் பலர்வியக்க மேன்மை கொள்ள
மேல்வானில் கவின்நிலவின் ஒளியில் தலைவன்
காதல்செயப் புறப்பட்ட இனிய நாளினில்
காரிகையின் பசலைநோயும் விலக வேண்டும்!

நேருச்சி வகிடெடுத்தே என்றன் நெஞ்சில்
நினைவெனும் நடுகல்லை ஊன்றி விட்டு
நீருள்ளே பாசியைப்போல் என்றன் நெஞ்சை
நீவிட்டே அகலாது பற்றிக் கொண்டு
காருள்ள மின்னென்ன ஓடி வந்து
கருத்துள்ளே புகுந்திட்ட செய்தி யாவும்
ஊருக்கும் உலகுக்கும் தெரிந் திடவே
உயிர்க்காதல் வாழவழி காண வேண்டும்!

அணைத்தென்றன் உடல்தழுவி இன்ப மளிக்க
அன்பரெனை ஊர்ப்புறத்தே வாடி நின்ற
துணைவிட்டு பேடகன்று சுகத்தைக் கொண்ட
சொற்காதை நீகேட்டது உண்டோ தோழி?
துன்பத்தால் மனமொடிந்து வாழ்வில் இன்பச்
சுவைசேர்க்க நாணத்தை விட்டுச் சொல்ல
என்னகமும் அன்றில்போல் தலைவ னோடு
என்னுள்ளம் குளிர்விக்க உறவு வேண்டும்!

நித்தமும் அனிச்சப்பூ மலர்ந்து கூம்பி
நிலவொளியில் நெஞ்சினைத் திறந்து காட்ட
வித்தைகள் செய்யும்இரு கண்ணோ குவளை
விருப்பத்தினை வெளிப்படுத்த எட்பூ நாசி
மெத்தெனும் கன்னமோ ரோசா மலர்தான்
மென்மையெனும் வெள்ளரிப்பூ வேதான்காது
முத்துப்பல் லோமுல்லை மங்கை அவளுக்கு
மாலையிடவேண்டுமெனில் ஒப்பம் வேண்டும்!

வெளிப்பகட்டுக்கு மயங்காமல் ஆசை கொண்டு
வியன்புலமை நல்லறிவும் உயர்ந்த பண்பும்
ஒளிப்பட்ட உயர்உள்ளம் வாய்த்தி ருக்கும்
ஒருத்திதரும் அன்பினிலே கலந்து நின்று
களிப்புறுக எனவிருக்கும் உரையின் உட்கோள்
கண்டறிந்து சோலைபோல் தழைக்க துயரம்
வளியிடையே அகப்பட்ட துரும்பு போலும்
வாடினும்பே ரறிவினால் உயர வேண்டும்!

வானமுகில் மண்ணகத்துப் பயிர்கள் வாழ
வளர்ந்தமலை மீதுவந்தே மோதி நின்று
தானமிழ்தாய்ப் பெய்துநின்று காத்தல் போல
சற்றுனது வருகைதனைச் சிறிது நேரம்
மீனொத்த மழைக்கண்ணால் அன்பு கூட்டி
மேன்மாடத் திருந்தெனக்குக் குளிர்ச்சி தரவே
யானொருவன் மயக்கத்தில் உன்றன் உறவால்
யாரெவரும் அறியாநிலை கொள்ள வேண்டும்!

இருஉள்ளம் கலப்பிற்குக் காதல் என்னும்
இலக்கியமாய் இருவருமிணைந் திடுவோம் தமிழாய்
வரும்வசந்தம் நமக்குத்தான் என்பதை யறிந்து
வாட்டந்தரும் சாவிலிருந்து மீண்டெ ழுவோம்
சிரித்துவரும் பொதிகை மலை தென்ற லோடு
சேர்ந்தொன்றாய் உளங்களிக்க வண்டி னத்தால்
அரிதாக திரண்டிருக்கும் தேனைப் போல
அளவற்ற மகிழ்ச்சியில் திளைக்க வேண்டும்!

●

# இருதய இரத்தக் குழாய் அடைப்புகளை திறக்க எளிய வழி

*மருந்து தயாரிப்பதற்கு வேண்டிய மூலப்பொருள்கள்:*


*1 கப் எலுமிச்சை சாறு*

*1 கப் இஞ்சிச் சிறு*

*1 கப் பூண்டு சாறு*

*1 கப் ஆப்பிள் சைடர் விநிகர்.*

*எல்லாச் சாறுகளையும் ஒன்றாக கலக்குங்கள் இலேசான இளஞ்சூட்டில் (சிம்மரில்) 60 நிமிடம் கொதிக்க வையுங்கள். நான்கு கப் மூன்றாக குறையும் சூடு ஆறியவுடன் சாறு இருக்கும் அளவுக்கு சம அளவு இயற்கைத் தேனை கலந்து ஜாரில் வைத்துக் கொள்ளுங்கள் நாள்தோறும் காலை உணவுக்கு முன் ஒரு டீ ஸ்பூன் பானத்தை அருந்துங்கள் மகிழ்ச்சியுடன் பானத்தை அருந்துங்கள். சுவையாகவும் இருக்கும் நீங்களே உங்களை பைபாஸ் அறுவை சிகிச்சையிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள்.*




*வாட்ஸ்ஆப் செய்தி.*

சென்னை ஐகோர்ட்டில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்கக் கோரும் தமிழக வக்கீல்களின் போராட்டத்தை ஆதரிக்கிறேன்.

உத்தரபிரதேசம் பீகார், ராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய 4 மாநிலங்களின் ஐகோர்ட்டுகளில், இந்தி வழக்காடு மொழியாக அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தமிழக வக்கீல்களின் கோரிக்கையில் தவறு என்ன இருக்கிறது?

இந்திய அரசியல் சட்டப்பிரிவு 348ன் படி மாநிலத்தின் கவர்னர், ஜனாதிபதியின் ஒப்புதலுடன் அப்படி அறிவிக்கலாம். அதே போன்று இந்தியாவின் அலுவல் மொழி சட்டப்பிரிவு 7ன் கீழ் ஐகோர்ட்டுகளில் தீர்ப்புகளும் உள்ளூர் மொழிகளில் வழங்கலாம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட 4 மாநிலங்களில் அவர்களின் உள்ளூர் மொழி அனுமதிக்கப்படும்போது, தமிழ்நாட்டில் ஏன் தமிழை பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது? தமிழக வக்கீல்களின் கோரிக்கை மிகவும் நியாயமானது. அதனை உடனடி யாக அமல்படுத்த வேண்டும்.

நான் இதுபற்றி பேசுவதற்காக விரைவில் சென்னை சென்று தமிழக முதல்அமைச்சரையும், சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதியையும் சந்திக்க இருக்கிறேன். சென்னை வக்கீல்களின் கோரிக்கையை ஏற்குமாறு அவர்களை கேட்டுக் கொள்வேன்.

அதே நேரத்தில் வெளிமாநிலத்தில் இருந்து சென்னை ஐகோர்ட்டுக்கு வரும் நீதிபதி முன்பு ஆங்கிலத்தில் வாதாடலாம். ஆனால் தமிழ்நாட்டை சேர்ந்த ஒருவர் அங்கு நீதிபதியாக நியமிக்கப்படும் போது, தமிழில் அவர் முன்பு ஏன் வாதாடக் கூடாது? அதில் என்ன தவறு இருக்க முடியும்? என்ற கேள்வியுடன் தமிழை வழக்காடு மொழியாக்க வேண்டும் என்று கட்ஜூ கூறினார்.


**உமா மகேசுவரி**

## சென்னை உயர்நீதிமன்றத்தில்

# தமிழ் வழக்காடு மொழி!

## சுப்ரீம் கோர்ட்டு முன்னாள் நீதிபதி கட்ஜு





மண்ணுக்குள்ளிருக்கும் ஆத்மாக்களின் குரலாக தீர்மானம் நிறைவேற்றிய தமிழக முதல்வற்கு நன்றி அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை!!!

அனைத்துலக சட்டவிதிகளுக்குப் புறம்பாக சிறிலங்கா இராணுவம் தமிழர்கள் மீது திட்டமிட்டு நடத்திய இனப்படுகொலை குறித்து சர்வதேச விசாரணையை வலியுறுத்தி தமிழக சட்டமன்றத்தில் பெரும் மதிப்பிற்குரிய தமிழக முதல்வர் செல்வி ஜெ.ஜெயலிதா அவர்கள் மீண்டும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளமையானது நீதி கேட்டுப் போராடிவரும் எமக்கு பெரும் உத்வேகத்தினைக் கொடுத்துள்ளது.

இனப்படுகொலைக் குற்றத்தில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா அரசத் தரப்பிற்கு ஆதரவாக உலக பிராந்திய வல்லாதிக்க சக்திகள் ஒன்றுபட்டு நிற்கும் நிலையில் இழைக்கப்பட்டுவரும் அநீதிக்கு எதிராக ஈழத்தமிழர்களாகிய நாம் பல்வேறு தளங்களில் அறத்தின் துணையோடு போராடிக்கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் தாயுள்ளதோடு தமிழக மக்களின் சார்பில் முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலிதா அவர்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளமை ஆறுதலாக இருப்பதுடன் பெரும் உத்வேகத்தினையும் தந்துள்ளது.

எமது நிலத்தில் எமது வாழ்வை நாமே தீர்மானிக்கும் வகையிலான சுதந்திர வாழ்வைக் கேட்டு நின்ற ஒரே காரணத்திற்காக சிறிலங்கா அரசப் படைகளால் கொன்று மண்ணுக்குள் புதைக்கப்பட்டிருக்கும் ஆத்மாக் களின் குரலாகவே இத்தீர்மானத்தினை நாம் கருதுகின்றோம்.

உயிருடனும், உயிரற்ற சடலங்களாகவும் மண்ணோடு மண்ணாக புதைக்கப்பட்ட ஒன்றரை லட்சம் தமிழர்களுக்கும் நீதிகேட்டு நாம் முன்னெடுத்துவரும் போராட்டத்தில் இறுதிவரை துணையாக இருக்க வேண்டுமென கேட்டுக் கொள்வதோடு தக்க தருணத்தில் தமிழக சட்ட மன்றத்தில் மீண்டுமொரு தீர்மானத்தை நிறைவேற்றி எங்கள் குரலுக்கு வலிமை சேர்த்த மைக்கு உலகத் தமிழர்கள் சார்பாக நன்றியினையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை-.**

# தமிழக சட்டமன்றத்தில் ஈழத்திற்கு ஆதரவான தீர்மானம்



# என் தேசம்



அன்புள்ள என் அண்ணன்மார்களுக்கு....

நெஞ்சிரங்காச் சூரியன்
நெருங்கிச் சுட்டெரித்த போதும்,
நம்பிக்கையோடு
முளைத்திருக்கிறேன் - என்
முற்றத்தில்.

முற்றமே வணக்கம்!
அண்ணன் தளபதிக்கும் கூட

அண்ணனே, தளபதியே!
எனது நாட்டைக் கேட்டேன்,
இல்லை என்கிறார்கள்.
ஏதும் உனக்குக் கிடையாதென்கிறார்கள்,
எனது முற்றத்தைக் கேட்டேன்,
நான் அடித்து விரட்டப்பட்டேன்
அகதியாக அடைக்கப்பட்டேன்.

அண்ணனே தளபதி!
உங்கள் முற்றத்தில் முளைத்திருக்கிறேன்,
முகம் துடைத்துச் சற்று எழுந்திருக்கிறேன்,
எனக்கென்று ஓர் இடம் தந்து,
எனக்கென்று ஒரு தடம் தந்து,
அழகாய்த் தளைத் திருக்கிறேன்.
கொஞ்சம் நிம்மதி,
அவ்வப்போது சின்ன உறக்கம்
உங்கள் முற்றத்திலிருந்து
கொஞ்சம் மூச்சு விடுகிறேன்.
ஆனந்தமாக எழும்
சுதந்திரக் காற்றை
முகர்ந்து கொள்கிறேன்.

அண்ணனே
இராமேச்வரத்திலிருந்து
எழுந்து வரும் காற்றே!

முள்ளி வாய்க்காலில்
கூட்டி எரிக்கப் பட்ட
மூன்று இலச்சம் எலும்புக் கூடுகளும்,
மாற்றி எழுதப்பட்ட
காணிக் கோவைகளும்,
கேப்பப் புலவில்
கேப்பார் இல்லாமல்
வெட்டிச் சரிக்கப்பட்ட
சோழப் பரம்பரையின்
கோலோச்சிய தமிழரின்
மண்டை ஓடுகளும்,
சாம்பல் மேடுகளுக்கப்பால்
புத்தன் சிலைகளும்
முளைத் திருக்கின்றன.

தமிழ் நாட்டு மன்னர்களே!
நெடுமாறன் அண்ணனே!
கோபால் சாமி அண்ணனே!
அண்ணன் காசி ஆனந்தனே!

கொட்டும் மழையில்
எங்கள் தேசத்துக்குள் நீங்கள்
நம்பிக்கையோடு பயணித்தது,
உங்கள் தம்பியை
கட்டித் தழுவி
நலம் விசாரித்ததை
உங்களுக்காய்

உங்கள் தம்பியிட்ட
அந்தப் பருக்கை வட்டிலை,
காட்டிலிட்ட மரக்கட்டிலை,
கூடாரம் அமைத்து
வானுள்ளே
அமைந்த சொல்லாடலை,
எல்லாமே
எனக்கு நம்பிக்கை தந்து போகிறது.

அப்போதெல்லாம்
எங்கள் தெருக்களுக்கு
நாங்கள் மன்னர்களே
மழைத் தூறல்களுக்கும்
நாங்கள் சாரல்களே.

ஐயா!
இப்போதெல்லாம்
புதிய முகங்கள்,
புன்னகை இழந்துபோன
மர்ம வீதிகள்.

புனரமைக்கப்பட்ட சாலையில்
ஒவ்வொரு காலையும்
அலங்கரிக்கும் மரணங்களும்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்
சிதைந்துபோன கொள்கையும்
கண் கூசியெழும் சூரியன்முன்
எழுந்து நிகழ்ந்து போகிறது.

அண்ணன் நெடுமாறனே!
மற்றும் அண்ணன் மார்களே!
கொஞ்சம் உங்களைப் பார்க்கணும்
உங்கள் கைகளைப் பிடித்தபடி
கொஞ்ச நேரம் அழணும்
அப்புறம்
மெலிதாய் எழும் சுதந்திரக் காற்றை
சுவாசித்தபடி
என் தேசத்தைப் பற்றி,
ஆனந்த புரம் பற்றி,
அவலங்கள் பற்றி,
என் தேசத்து
விடுதலை வீரனின்
இறுதிப் பயணம் பற்றி,
இன்னும் நான்
எழுத முடியாதவை பற்றி,
நந்திக் கடல் பற்றி,
பேசி மறந்து பேசணும்.

ஐயா!
பொல நறுவைக்கப்பால்
சிங்கள தேசமொன்றில்
தமிழ்ப் பெண்களின்
அவலக் குரல் எழுகிறதாம்.
ஒரு பத்திரிகையாளன்
அன்பான
முகம்மதியச் சகோதரன்
விவரிக்கிறான்.

அது சித்திரவதை முகாமென்றும்
ஈழப் பெண் விடுதலைப் போராளி
ஆயுதம் தாங்கினாள்
என்ற குற்றச் சாட்டில்
வதைக்கப் படுகிறாளாம்.

அப்பால்,
அப்பால் என்ன,
ஒரு காலைப் பொழுதில்
சூரியன் எழுமுந்தி
அவள் எரிக்கப்படலாம்.
இல்லையேல்
நிர்வாணமாய் வீசப்படலாம்.
வேதனை வெம்பியாரம்
வெழுக்கும் சூரியன் முன்
தகிக்கிறது.

தமிழ் நாடே!
என் தாய்த் திரு நாடே!
அறியப் படாத முகவரியில்
இலையான் பூச்சிகளால்
என் தேசம் ஆடை உடுத்தப்படுகிறது.

ஐயா!
எரிக்கப்படலாம்
இல்லையேல் புதைக்கப்படலாம்
தெருவில் வீசப் படலாம்
அது நானாகக் கூட இருக்கலாம்.

அண்ணன் நெடுமாறனே!
அண்ணன் கோபாலசாமியே!
அண்ணன் காசி ஆனந்தனே!

நம்பிக்கையோடு உங்கள் பயணம்,
தம்பியின் எழுகை,
பருக்கை வட்டில்
அது நிகழும் வரை,
எதுவும் நடக்கலாம்.
அது நானாகக் கூட இருக்கலாம்
சிங்கள தேசத்திற்குச் சொல்லுங்கள்
மரணம்
எனக்குரிய தீர்வு அல்ல என்று.

---

**தரா கார்த்திகை.**



# மதிக்கும் பண்பு

**ரஞ்சித்.**

இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஒருவர் ஒரு நாள் மாலை வேலை முடியும் தருவாயில் இறைச்சி பதப்படுத்தும் அறைக்குள் எதோ வேலையாக இருந்த போது எதிர் பாராதவி தமாய் அதன் தானியங்கி கதவு பூட்டிக் கொண்டுவிட்டது.

உடனே அவர் கூச்சலிட்டார் அவர் எழுப்பிய ஓசை வெளியே யாருக்கும் கேட்கவில்லை. மேலும் பெரும்பாலானோர் வேலை முடிந்து கிளம்பி விட்டனர். இன்னும் சிறிது நேரத்தில் ஐஸில் உறைந்து இறக்கப்போகிறோம் என்று எண்ணி கவலை அடைந்தார் அவர்.

அப்போது கதவு திறக்கும் சத்தம் கேட்டது. உயிர் வந்தவராய் வெளியே ஓடி வந்தார். தொழிற் சாலை காவலாளி நின்று கொண்டிருந்தார். சந்தோஷத்தில் அவரைக் கட்டித் தழுவிக் கொண்டார். அவரிடம் நான் உள்ளே இருப்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது என்று கேட்டார்.

சார், நான் இங்க 10 வருசமா வேலை செய்றேன். நீங்க ஒருத்தர் மட்டும் தான் என்னையும் ஒரு மனுசனா மதிச்சு காலை வணக்கமும் சாயங்காலம் வணக்கமும் சொல்றவர் இன்னிக்கி காலை வணக்கம் சொன்னீங்க. ஆனா சாயங்காலம் உங்களோட வணக்கத்தைத் தேடினேன் அப்போ தான் உங்களக் கண்டு பிடிச்சேன் என்றார்.

ஒருவருக்கொருவர் மற்றவர்களை தரக்குறைவாக எண்ணாமல் மதித்து மரியாதை செலுத்திக் கொள்வது எப்போதுமே நன்மை பயக்கும் என்பதை யும் தாண்டி, அதுதான் மனிதப் பண்பு என்பதை புரிந்து செயல்பட வேண்டும்.

---

**துணை ஆசிரியர்**
**இமயவரம்பன்**
**பிறந்தநாள்**
**6/10/2015**



உனக்கு இமயம்
வரம்பு அல்ல
அதையும் தாண்டி
உன் இயக்கம்
இருக்க
வாழ்த்துகள்....

நடிகர் சங்கத் தேர்தலில் நாசர், கருணாஸ், பொன்வண்ணன், விசால், கார்த்திக் ஆகியோர் தலைமையிலான அணி கொடுத்துள்ள தேர்தல் அறிக்கை.

1. நீதிமன்றத்தில் சட்டச் சிக்கலில் மாட்டிக்கொண்டிருக்கும் சங்கநிலத்தை மீட்டெடுப்போம்.

2. செயற்குழு, பொதுக்குழுவின் ஒப்புதலோடு ஷிறிமி ஒப்பந்தத்தை ரத்து செய்து, நமது சங்க நிலத்தை நமதாக்குவோம்!

3. அறக்கட்டளையின் ஜிஸிஹிஷிஜி சட்டத்திற்கு புறம்பாக, 2 பேர் மட்டுமே கொண்டு செயல்பட்ட அறக்கட்டளையை, சட்டப்படி மூத்த கலைஞர்களைக் கொண்டு 9 பேர் நியமிப்போம்.

4. நமது சங்கநிலத்தில் புதிய கட்டிடம் கட்ட வெளிப்படையான அணுகுமுறையுடன், சிறப்புக்குழு அமைத்து விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும்.

5. கட்டப்படும் புதிய கட்டிடம் நமது சங்க உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் அரங்கமும், அதேசமயம் வருமானம் தரும் வகையிலும் சிறப்புக்குழு அமைத்து திட்டமிடப்படும்.

6. கட்டிடம் கட்டுவதற்கும், நலத்திட்ட உதவிகளுக்கும் பொருளாதாரத்தை மேம்படுத்த பாண்டவர்அணி சார்பில் உடனடியாக ஒரு திரைப்படம் எடுத்து, நடிகர் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கப்படும்.

7. இதுவரை கடந்த நிர்வாகத்தால் செய்யப்பட்ட செலவுகளை மீண்டும் தணிக்கை செய்து தவறுகள் சீர் செய்யப்படும். அதன்மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

8. நடிகர் சங்கத்தில் உறுப்பினராக கட்டணம் நிர்ணயம் செய்யப்படும். கிஸிளி க்களை துணை விதிகளின் கீழ் கொண்டுவந்து அவர்களை அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்படுவதோடு, அவர்களின் பணி, செயல், பணப்பட்டுவாடா அனைத்தும் முறைப்படுத்தப்படும்.

# நடிகர் சங்க தேர்தல் அறிக்கை



9. திரைத்துறையில் கிஸிளி மூலம் செல்லும் துணைகலைஞர்களுக்கு படப்பிடிப்பு முடிந்ததும் உடனடியாகவோ அல்லது சங்க வழியாகவோ சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

10. முறைப்படுத்தப்படாமல் இருக்கும் உறுப்பினர் பட்டியல்களை, புகைப்படத்துடன் முழுவிவரமும் முறைப்படுத்தப்படும்.

11. நடிகர் சங்கத்திற்கென இணையதளம் உருவாக்கப்படும். அதன் மூலம் இயக்குனர், தயாரிப்பாளர், தயாரிப்பு நிர்வாகி இவர்களுக்கு பரிந்துரை செய்து உரியவர்களுக்கு வேலை வாய்ப்புகள் வாங்கித்தரப்படும்.

12. நடிகர் சங்கத்தின் உள்ளே உணவகம் ஒன்று உருவாக்கப்படும். அதில் குறைந்த விலையில் உறுப்பினர்களுக்கு உணவு வழங்கப்படும்.

13. நமது சங்க உறுப்பினராக உள்ள நாடகக் கலைஞர்கள், திரைக் கலைஞர்கள் அனைவருக்கும் இன்சூரன்ஸ், செய்து தரப்படும்.

14. துணை நடிகர்களுக்கு மிகப்பெரிய அளவில் வாய்ப்பைத்தரும் சின்னத்திரை நிறுவனங்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, மேலும் வாய்ப்பைப் பெற்றுத்தர சின்னத்திரை இயக்குனர் மற்றும் தயாரிப்பாளர்களிடம் பரிந்துரை செய்வோம்.

15. சின்னத்திரையில் உள்ள நமது சங்கத்தைச் சார்ந்த நடிகர்களுக்கு, பெரிய திரையில் வாய்ப்பைப் பெற்றுத்தர திட்டமிடப்படும்.

16. உறுப்பினர்களின் சந்தாத் தொகையை வருடாவருடம் புதுப்பிப்பதற்கு பதிலாக, 3 வருடத்திற்கு ஒருமுறை புதுப்பிக்குமாறு பொதுக்குழு விதிகள் திருத்தப்படும்.

17. 25 வருடம் தொடர்ந்து சந்தா கட்டிய தொழில்முறை நடிகர்கள் ஆயுட்கால உறுப்பினர்களாக சட்டவிதிகள் திருத்தப்படும்.

18. ஈமச்சடங்கு உதவி, திருமண உதவி, கல்வி உதவி போன்றவை உயர்த்திக்கொடுக்கப்படும்.

19. மூத்த நாடக நடிகர்களுக்கு மாதாமாதம் ஒய்வூதியமாக ஒரு குறிப்பிட்ட தொகை, வைப்புநிதியாக உள்ள ரூபாயின் மூலம் வரும் வருமானத்தில் வழங்கப்படும்.

20. ஒவ்வொரு மாவட்டத்திற்கும், குறிப்பிட்ட மருத்துவமனையில் “முழு உடற்பரிசோதனை“ செய்ய உறுப்பினர்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

21. குடும்பத்தால் கைவிடப்பட்ட மூத்த கலைஞர்களுக்கு சங்கம் சார்பாக ASSOCIATION OLD AGE HOME ஒன்று உருவாக்கி அதில் தங்க வைத்து பராமரிக்க ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

22. பொருட்காட்சியை சார்ந்து இருக்கின்ற நாடக நடிகர்களின் ஊதியத்தை, அரசாங்கத்திடம் பேசி உயர்த்திதர முயற்சி எடுக்கப்படும்.

23. தமிழகமெங்கும் நாடக உலகை சார்ந்து இருப்பவர்கள் வெளியூர் பயணம் செய்ய (ரயில் பயணத்தில் உள்ளது போல்) அரசு பஸ்களில் சலுகைக் கட்டணம் பெற்றுத்தர முயற்சி செய்வோம்.

24. வெளிமாநிலங்களில் உள்ள நடிகர் சங்களில் உள்ள சிறப்பு திட்டங்களை கண்டறிந்து, நமது சங்கத்தில் அவைகளை செயல்படுத்துவோம்.

25. தமிழகமெங்கும் உறுப்பினராக உள்ள நாடகக் கலைஞர்களின் வேடத்திற்கு ஏற்ப, புதிய உடை, மேக்கப் (சிகை அலங்காரம்) இசைக் கருவிகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.

26. தொன்மையான நாடகக் கலைகளை வளர்த்துவரும் சிறந்த இரண்டு நாடக குழுவையும் சிறந்த நடிகர்களில் மூன்று பேரையும் வருடா வருடம் தேர்ந்தெடுத்து சுவாமி சங்கரதாஸ் கலைஞர் என்ற விருதும் ஊக்கத்தொகையும் கொடுத்து கவுரவிக்கப்படுவார்கள்.

27. மத்திய, மாநில அரசு விருது பெறும் திரைப்படக் கலைஞர்களை சங்கத்தின் மூலம் கௌரவப்படுத்தி பாராட்டு விழா நடத்தப்படும்.

28. வெளியூர் நாடகக் கலைஞர்கள் சென்னையில் வந்து தங்குவதற்கு தங்கும் வசதிகள் செய்து தரப்படும்.

29. திறமையுள்ள கலைஞர்களுக்கு கிடைக்க வேண்டிய கலைமாமணி, பத்மபூஷன், பத்மஸ்ரீ போன்ற விருதுகளுக்கு தகுதியானவர்களை மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் பரிந்துரை செய்வோம்.

30. நாடகம் இல்லாத கால கட்டங்களில் நாடகக் கலைஞர்களுக்கு சினிமா வாய்ப்புகள் உருவாக்கித் தரப்படும்.

31. நடிகர் சங்கத்திற்குள் கேமரா, எடிட்டிங், இசை கோர்ப்பு கொண்ட ஒரு திரைப்பட பிரிவு உருவாக்கப்படும். அதில் இளம் நடிகர்களைக் கொண்டு, நாடகம், திரைப்படம் சார்ந்த மூத்த கலைஞர்களை பேட்டி எடுத்து ஆவணப்படம் உருவாக்கப்படும்.

32. நமது சங்கநிலத்தை அடமானம் வைக்காமலே மாதம் 30 லட்சத்திற்கு மேல் வருமானம் வருவதுபோல் திட்டங்கள் தீட்டப்படும்.

33. நடிகர் சங்கத்தின் மூலம் சின்னத்திரை தொடர் எடுத்து, அதன்மூலம் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பும், சங்கபொருளாதாரமும் உயர திட்டமிடப்படும்.

34. இரண்டு டப்பிங்/எடிட்டிங் தியேட்டர் நடிகர் சங்க கட்டிடத்தில் கட்டப்படும்.

35. விளம்பரப்படம் எடுப்பதற்கான புளூமேட் அரங்கம் உருவாக்கப்படும்.

36. 10 கேரவன்கள் வாங்கி வாடகைக்கு விடப்படும்.

37. (CCL) மூலம் வருகின்ற தொகையை அந்நிறுவனத்திடம் உயர்த்திக்கேட்கப்படும். அத்துடன் தனிப்பட்ட முறையில் நட்சத்திர கிரிக்கெட் நடத்தி நிதி திரட்டப்படும்.

38. நடிகர் சங்க நிலத்திற்காக முதலில் குரல் கொடுத்த திரு.பூச்சிமுருகன், திரு.குமரிமுத்து, திரு.காஜாமொய்தீன், திரு.சுந்தரம் ஆகியோர் மேல் நடிகர் சங்கம் போட்ட வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்படும்.

39. திரு.ஜேப்பியர், திரு.ஐசரிகணேஷ் மூலம் உதவித்தொகை பெற்றுவரும் உறுப்பினர்களின் உதவித்தொகை உயர்த்த முயற்சி எடுக்கப்படும்.

40. SRM நிறுவனர் திரு.பச்சமுத்து அவர்கள் மூலம் நமது உறுப்பினர்களுக்கு மருத்துவ உதவிகள் வாங்கித்தரப்படும்.

41. நமது நடிகர் சங்க உறுப்பினர்களின் குழந்தைகள் ஆண்டுதோறும் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புகளில் அதிகமதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க ஏற்பாடு செய்யப்படும். மேலும், அவர்களின் மேற்படிப்பிற் கான உதவிகளும் நமது சங்கத்தின் மூலம் செய்து தரப்படும்.

42. குருதட்சணை என்ற பெயரில் ஒரு சிறப்புத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதனை முதல் பொதுக்குழுவில் அறிவிப்போம்.

**சவால்ராம்.**

### உலக நாடுகளில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை

இந்தியா – 60793814 (5.91%)

இலங்கை – 3113247 (15.36%)

மலேசியா – 1396000

இங்கிலாந்து – 300000

தென் ஆப்ரிக்கா – 250000

கனடா – 200000

சிங்கப்பூர் – 188591 (5.00%)

அமெரிக்கா – 130731

பிரான்ஸ் – 125000

மொரீசியஸ் – 72,089 (5.83%)

**உமா மகேசுவரி.**



சிங்கம் அறக்கட்டளை மூன்றாம் ஆண்டு துவக்க விழாவில் முற்றம் இதழின் ஆசிரியர் விசவனூர் வே. தளபதி அவர்களுக்கு புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு அய்யனார் அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கியபோது.



சிங்கம் அறக்கட்டளை மூன்றாம் ஆண்டு துவக்க விழாவில் சிங்காரச் சென்னை இதழாசிரியர் எஸ்.ரங்கநாதன் அவர்களுக்கு புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு அய்யனார் அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கியபோது.



புதுச்சேரி முதல்வர் மாண்புமிகு ரங்கசாமி அவர்களிடம் முற்றம் இதழை ஆசிரியர் விசவனூர் வே. தளபதி அவர்கள் தந்தபோது. அருகில், இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த அனைத்திந்திய பத்திரிகை ஆசிரியர் வெளியீட்டாளர் சங்கத்தின் நிறுவனரும் தலைவருமான டாக்டர் இரேஜேந்திரன் அவர்கள்.



சிங்கம் அறக்கட்டளை மூன்றாம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் 'கனவு நாயகன்' நூலை புதுச்சேரி முதல்வர் மாண்புமிகு ரங்கசாமி அவர்கள் வெளியிட சட்டப்பேரவைத் தலைவர் சபாபதி அவர்கள் பெற்றுக் கொண்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் அய்யனார், வளரும் அறிவியல் ஆசிரியர் இ.கே.தி.சிவகுமார், சிங்கம் அறக்கட்டளையின் தலைவர் அரிமா பிரகாஷ், செயலாளர் அரிமா பாலமுருகன் ஆகியோர்.



# உண்மையைத் தேடி

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பி பி சி க்கு அளித்த பேட்டியில் விடுதலைப்புலிகள் இயக்கம் ராசீவ் காந்தியைக் கொலை செய்யவில்லை என்று ஒரு முறை பேட்டி அளித்துள்ளார் என்று இப்போது விவாத மேடை ஒன்றில் கூறியுள்ளார் விசாரணை அதிகாரி. விடுதலைப்புலிகள் மீது வீண்பழி சுமத்தியதால் அதன் தலைவர்கள் என்ன பேசுகின்றனர். ஏதேனும் உண்மை வெளிவந்து விடுமோ என்ற அச்ச உணர்வோடு உன்னிப்பாக கவனித்துக் கொண்டு இருக்கின்றார் ரகோத்தம்மன். ஒரு சில விவாத மேடையில் உண்மைகள் வெளிவருது போல் இருந்தால் அவர் அதை திசை திருப்பும் வேலையை செவ்வனே செய்கிறன்றார்.

விடுதலைப்புலித் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் உள்ளூரில் பேட்டி கொடுக்கும்போது இது ஒரு தும்பியல் (துயரச் சம்பவம்) சம்பவம் என்று உள்ளத்தின் ஆழத்தில் இருந்து கூறியுள்ளார். ஏன் அவர் அவ்வாறு குறிப்பிட்டார் என்று நாம் எண்ணிப் பார்க்கும் போது, மார்ச் 312015 தந்தி டி வி யில் அஜித்ரோகனே என்னும் கடல்படை அதிகாரியைப் பேட்டி கண்ட போது, மறைந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் விருப்பத்திற்கு இணங்க ராசிவ்காந்தி 13 அம்ச வரைவுத் திட்டத்தை இலங்கையில் ஏற்படுத்த வந்தார். இலங்கை ஒரு சிறிய நாடு, அந்த 13 அம்சத் திட்டத்தை ஏற்றுக் கொண்டால் இலங்கை இரண்டாக உடையும். இதை நாங்கள் ஏற்கவில்லை, ஆகவே ராசிவ் காந்தியை நான் கொலை செய்ய எத்தனித்தேன் என்று தெளிவாக 27 ஆண்டுகளுக்கு முன் ராசீவ்காந்தியைத் தாக்கிய கப்பல்படை அதிகாரி இன்று அது சரியான செயல் என்று பேட்டி அளித்து இருக்கின்றார்.

விடுதலைப்புலிகளை வளர்த்தவர், உருவாக்கியவர் புரட்சித்தலைவர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள். அவரின் விருப்பத்திற்கு இணங்க அவருக்கு ஆதரவாக ராசீவ்

12 ● இராஜாசிங்

காந்தி இருந்து இருக்கின்றார். அப்படி ஆதரவாக இருந்த ஒருவரை எப்படி விடுதலைப்புலிகள் கொலை செய்து இருப்பார்கள். அன்றைய கால கட்டத்தில் ராசீவ் காந்தி மீண்டும் பிரதமர் ஆவதற்கு நல்ல வாய்ப்புகள் இருந்தது என்று அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்து இருந்தனர். அப்படி ராசீவ்காந்தி பிரதமர் ஆனால் இலங்கையில் தமிழர்களுக்கு ஆதரவான நிலை ஏற்படும் என்று சிங்கள அரசு கருதியதின் அடிப்படையில் இலங்கை அரசும் இந்தியாவின் சில கைக்கூலிகளும் இணைந்து இச்செயலைச் செய்து உள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதை திருச்சி வேலுசாமி தெளிவாகத் தெரிவிக்கின்றார்.

மேலும் தமிழக மக்களின் தலைவராக விளங்கிய புரட்சித் தலைவரை வரலாற்றுச் சுவடுகளில் தீவிரவாதிகளுக்கு உதவிய மாபெரும் தலைவர் என கேவலப்படுத்துவது போல் இச்செயல் அமைகின்றது. மேலும் விடுதலைப்புலிகள் இலங்கை மண்ணைத் தவிர வேறு எங்கும் கொலை போன்றவற்றில் ஈடுபடவில்லை. ஆனால் இந்திய ரா அமைப்பின் தூண்டுதலினாலும், உந்துதலினாலும் ஒரு சில சம்பவங்கள் தாக்குதல் நடந்துள்ளன. இந்திய ரா அமைப்புத் தலைவர் மிகத் தெளிவாய்ச் சொல்லுகின்றார். விடுதலைப் புலிகள் இக்கொலையை செய்யவில்லை என்று (உ.ம்) சொல்ல வேண்டும் என்றால் கே.பி.கருணா போன்றோர் தமிழ் ஈழப் பகுதியை விட்டு வெளியேறிய பின் அவர்களைப் பின் தொடர்ந்து செல்லவில்லை. மேலும் கடைசி யுத்தத்தில் துரோகிகளின் துரோகச் செயலால் அவர்கள் போரிட்டு மடிந்தனரே தவிர, ஐந்து அல்லது ஆறுபேராக சிறு சிறு குழுக்களாக 30, 40 பிரிவுகளாக சிங்களப்பகுதிக்குள் சென்று, சிங்களர்களை, சிறை பிடித்தோ அல்லது சுட்டுக் கொன்றோ, சிங்கள அரசிடம் போரை நிறுத்தச் சொல்லித் நிர்பந்தித்து இருக்கலாம் என கருணா தனது பேட்டியில் மறைமுகமாக தனது கருத்தை வைக்கிறார். ஆனால் புலிகளோ ஈழ நாட்டைப் பெற சர்வதேச விதிகளுக்கு உட்பட்டு, நேர்மையான வழியையே பின்பற்றினர். குறுக்கு வழியை பின்பற்றவில்லை. தங்களை அழிக்கும் சிங்களவனைக் கூட நீதி நேர்மை என்ற கட்டுப்பாட்டில்தான் எதிர்த்தனர். இவ்வாறு நீதி நேர்மை உள்ளவர்கள் எப்படி ராஜீவ்காந்தியை மட்டும் கொலை செய்து இருப்பர். இதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று பல நாடுகளிலும் பல போராட்டங்களிலும் தங்களது நோக்கத்தை அடைய பல குறுக்கு வழியில் போர் குற்றத்தில் ஈடுபடாமல், நேர்மையான வழியில் போராடி உயிர்நீத்த தியாகிகள் எவ்வாறு இக்கொடுங்குற்றத்தை செய்து இருப்பர் என நாம் சற்றே உணரவேண்டும்.

மேலும் 13 அம்ச ஒப்பந்தம் தமிழர்களை உயர்த்தாது என்றாலும், சமஉரிமையை தமிழர் பெறுவதை சிங்களர் விரும்பவில்லை என்பதை முன்னால் கடற்படை அதிகாரியின் பேட்டி, எடுத்து காட்டுகின்றது. (இது தான் இலங்கையில் தமிழனின் உரிமைப் போராட்டம் ஆகும்). மேலும் இலங்கை ஒருகாலத்தில் திராவிட நாட்டுடன் இணைந்த பகுதி, என்னுடைய மூதாதையர் (முன்னோர்) அப்பகுதியை அரசாண்டனர். பின்பு சூழ்ச்சியாலும், வஞ்சகத்தாலும் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாலும் தமிழன் சிறுபான்மை இனமாக மாற்றப்பட்டு, அந்த இனம் இல்லாமல் இன்று இலங்கையில் அழிக்கப்படுகின்றது. நாளை இந்தியாவில் தமிழன் சிறுபான்மையினர். இந்த அழிப்பு வேலைகள் இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் நடைபெறலாம். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு சொல்ல வேண்டும் என்றால் 15.09.2015ல் ஆயுத எழுத்து நிகழ்ச்சியில் சி.வி.ராமன் நடுநிலையோடு பேசும்போது இந்திய நலன் தான் முக்கியம். தமிழ் நாட்டில் தமிழனின் நலன் அல்ல என்று கூறி தமிழர் தமிழகத்தில் அழிவது தவறில்லை என்பதை மறைமுகமாக தெளிவாக கூறுகின்றனர் என்பதை தெரிவிக்கிறார். ஜவஹர்லால் நேரு தன் மகள் இந்திராகாந்திக்கு எழுதிய கடிதத்தில், ஆரிய திராவிட யுத்தம் என்று குறிப்பிடுகின்றார். இதைத் தான் சுப்ரமணியசாமி, சிங்களர் இந்தியாவின் ஒரிசா பகுதியில் இருந்து குடியேறியவர்கள் என்று குறிப்பிடுகின்றார். இதனால் தமிழன் சிங்களர்க்கு முன்னே குடியேறி உள்ளான் என்று அவர்கள் சொல்ல வருகிறார்கள்.

**தமிழ் இன அழிப்பு:**

திராவிட இனத்தை அழிப்பதற்கு ஆரியர்கள் எவ்வாறு முயற்சி செய்கின்றனர் என்பதற்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டு கே.பி.என்ற குமாரன்

பத்பநாபாவை பேட்டி கண்டு தந்தி (29.09.2013) டிவிவெளியிட்டது. அதில் முன்னுரையாக அரிகரன் பேசுகின்றார். பின் கே.பி.. பற்றி சிறிய விளக்கம் என்று கூறிவிட்டு பேட்டிக்குச் செல்கின்றார். அதில் கே.பி.கடைசி யுத்தத்தில் ஆயுதத்தை புலிகளுக்கு அனுப்பாதது தான் தோல்விக்கு காரணம். இண்டர்நேசனல் போலிசார் அவரை தடை செய்து விட்டனர் என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் கே.பி.2002 முதல் 2008 வரை யாருடனும் தொடர்பு கொள்ளாமல் தாய்லாந்தில் தங்கி இருந்ததாகக் கூறுகின்றார். பின் போர் முடிந்தவுடன் புலிகளின் இயக்கம் இலங்கையில் இல்லை என தெரிந்தபின் மலேசியாவில் இருந்து இலங்கைக்கு சிங்கள ராணுவத்தினர் பாதுகாப்புடன் இலங்கை வந்தேன் என்று கூறுகிறார். இப்படி இருக்க கரிகரன் தந்தி டி.வி. தொகுப்பு ஆசிரியர் தன் உரையில் கே.பி.விடுதலை புலிகளுடன் இருந்ததாகக் கூறி இல்லாததை இருப்பது போல் சித்தரிப்பது, இலங்கை தமிழர்களுக்கு தமிழகத்தின் உதவி கிடைத்துவிடக் கூடாது என்பதில் எப்படி எல்லாமல் பொய்யை திரித்து கூறி அழிவின் விழும்பில் இருக்கும் இலங்கையில் உள்ள அந்த தமிழர் இனத்தை எப்படி எல்லாம் அழிக்க முயல்கின்றனர் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. ராஜீவ்காந்தி கொலையில் விசாரணை அதிகாரிகள், வழக்கறிஞர்கள் முக்கிய பொறுப்பில் இருந்தவர்கள் அனைவரும் ஆரியர்கள். திராவிட அதிகாரிகள் அன்றே விசாரணை சரியான பாதையில் செல்லவில்லை என்று எதிர்ப்பு தெரிவித்து தங்கள் பதவியை இராஜினாமா செய்தனர். இதை நாம் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

மேலும் தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் அரசியல்வாதிகள், திராவிடக் கட்சிக்காரர்கள், திராவிட அமைப்புகள் என அனைவரும் விசாரணை வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டு மிரட்டப்பட்டனர். அவர்கள் மீது பழிச்சொற் களும் மக்கள் சந்தேக பார்வை கொள்ளும்படியான ஒரு மாயையான சூழ்நிலையை ஏற்படுத்தினர். அடல் பிகாரி வாஜ்பாய், தி.மு.கவினரைப் பார்த்து வருணித்தார். இதில் என்ன சோகம் என்றால் தமிழர்களுக்காக பேசும் ஐயா பழநெடுமாறன், காந்திய இயக்கவாதி தமிழருவி மணியன் மற்றும் தமிழ் தலைவர்கள் ஒருவர் கூட தமிழனை எப்படி இவ்வாறு இழிவுபடுத்தலாம் என்று கேள்வி கேட்கவில்லை. நீதிமன்றம் சென்று நீதியை நிலைநாட்ட விரும்பவில்லை. இன்று நல்லவர் போல் வேடம்போடும் பலர் அன்று எங்கேயோ ஒளிந்து கொண்டனர். இதனால் தானே ஈழத்தை ஆட்சிசெய்த (மக்களுக்கு) விடுதலைப்புலிகளுக்கு தி.மு.க.கழகம் நேரிடையாக துணிச்சலாக சட்டத்திற்கு முன்பாக உதவி செய்ய முடியாத சூழல் ஏற்பட்டது.

தி.மு.க.அரசு விடுதலைப்புலிகளுக்கு கடைசி யுத்தத்தில் ஆதரவாகப் பேசி இருந்தால், அல்லது குரல் கொடுத்து இருந்தால் விடுதலைப் புலிகளுக்கும், தி.மு.கவிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை அன்றே கூறினோம். இன்று அச்செயல் வெளிப்பட்டு விட்டது என்ற பொய் பிரச்சாரத்தை இதன் மூலம் உருவாக்கி ராஜீவ்காந்தி கொலை வழக்கு இன்னும் முடிவடையாமல் நிலுவையில் இருக்கும்போது செய்யாத பழியை இதன் மூலம் செய்ததாக ஒரு மாயையை உருவாக்கி தி.மு.க. இயக்கத்தை தீவிரவாத இயக்கமாக அறிவித்து அதை நிரந்தரமாகத் தடையும் செய்து இருக்கலாம். அல்லது நிராபராதிகளான சாந்தன், பேரறிவாழன் போன்றோர் போல் தி.மு.க.வின் முக்கியத் தலைவரை நிரந்தரமாக சிறையில் அடைத்தும் இருக்கலாம். இதனால்தான் கடைசி யுத்தத்தில் தி.மு.கழகம் குந்திக் குந்தி செயல்பட வேண்டிய சூழ்நிலை உருவானது. இது ஆரியர் செய்த சூழ்ச்சியின் வெற்றி என்று நாம் கூறலாம். மேலும் ஜெயா டி.வியில் கார்கில் போருக்கு முன் ஒரு செய்தி வெளியானது. இந்தியத் திருநாட்டின் எல்லையில் இவ்வளவு பெரிய ஊடுருவல் நடந்தால் இது யுத்தத்தில் போய் முடியும் என்று புரட்சித் தலைவி அறிக்கை வெளியானது. அன்று 3ஆம் கட்டத் தலைவர்கள் இதை விமர்சனம் செய்தனர். ஆனால் சில காலங்களுக்குள் கார்கில் யுத்தம் வந்தது. அன்று அத்வானி அவர்கள் உள்துறை அமைச்சராக இருந்தார். அப்படி என்றால் ஆட்சியில் இல்லாத போதும் நாட்டின் நலனிலும், உளவுத்துறையின் ஒத்துழைப்பாலும் செயல்பட்ட ஜெயலலிதா அம்மையாரின் அணுகுமுறையில் தமது கட்சித் தலைவர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் உந்துதலினால் தமிழர்களுக்கு உதவி செய்த ராஜீவ்காந்தி மரணத்தை அதிகாரிகள் நேர்மையாக விசாரிக்கவில்லை என்று உணர்ந்ததினால்

அதற்கான நடவடிக்கைகள் எடுக்க முனையும் போது தான் கொலையின் சூத்ரதாரி என்று சொல்லப்படுகிற சுப்ரமணியசுவாமி ஜெயலலிதா அம்மா மீது சொத்து குவிப்பு வழக்கு என ஒன்றை திணித்தார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். மேலும் செப்டம்பர் 08.09.2015 அன்று அதிகாலை புதிய தலைமுறையில் செய்தி துளி என்னை வியப்படைய வைத்தது. செய்தி மியான்மர் அகதிகள் தங்குவதற்கு சரியான இடம் கொடுக்காமல் அலைக்கழித்தது என்று செய்தி வந்தது. இது பத்திரிக்கை செய்தியாக வந்ததின் விளைவு, விசாரணை ஆணையம் தானாக முன் வந்து, தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியது. ஆனால் இந்த மண்ணில் பிறந்த நம்முடைய மூதாதையர் ஆட்சி செய்த இலங்கையில் வாழ்ந்து பின் அங்கிருந்து அகதிகளாக தமிழகத்திற்கு வரும் தமிழன், முள் வேலி முகாம்மிற்குள்ளும், சிறப்பு முகாமிற்குள்ளும் (சித்தரவதை செய்யும் முகாம்) சிறை கைதியைப் போல்சித்தரவதை செய்யப்படுவதை ஊடகங்களும், பத்திரிக்கைகளும் தலைப்பு செய்தியாக வெளியிட்ட பின்னரும் எவ்வித நடவடிக்கைகளும் இல்லை. இது தான் இந்தியாவில் தமிழர்களின் பரிதாபநிலை, இதை உணர்வார்களா தமிழர்கள், எம் இன தமிழ் மக்களே நாளை நாம் அழியப்போவதை எண்ணியாவது இன்று ஒன்று கூடுவோம்.

**ரகோத்தமனின் கூற்று:**

ரகோத்தமன் கூறும் போது ஒரு குற்றத்தை விசாரிக்கும் போது உண்மை மாத்திரம் ஆணித்தரமாக காண்கிரிட் போன்று திடமாய் அமையும். மற்ற செய்தி எல்லாம் மறைந்து போகும் என்று கூறுகின்றார். ஆம் மரகதம் சந்திரசேகருக்கும், சிவராசனுக்கும் உள்ள தொடர்பை நாம் உற்று நோக்கினால் தெளிவாகத் தெரியும்.

1. அவர் ‘ராஜீவ் கொலை வழக்கில் மர்மம் விலகும் நேரம்’ என்ற யுத்தத்தில் உள்ள ஒரு சில செய்திகளை நாம் பார்த்தாலே தெளிவாக இவர் கொலையை விசாரிக்கவில்லை, மறைக்கின்றார் என புரிகின்றது.

2. சுபா, தணு, நளினி மூன்று பேரும் பல இடங்களுக்கு சென்று வந்தனர், சுபா, தணு வெளியே செல்லும் போது இலங்கை தமிழர் என தெரியா வண்ணம் நளினி செயல்பட்டார்.

3. சிவராசன் நன்கொடை கொடுப்பதற்கு மாத்திரம் மரகம்சந்திரசேகரை பார்க்கச் சென்றார்.

4. தணு போட்டோவைக் காட்டிய போது ஆஸ்பத்திரியில் தங்கி இருந்த லலித் மரகதம், சந்திரசேகர் (மரகதம் சந்திர சேகரின் மகன்) அந்த பெண்ணைத் தெரியாது என்று கூறியவுடன் அருகாமையில் இருந்த குழந்தை தெரியும் என்று சைகை காட்டியது. அதனால் லலித் மரகதம் சந்திரசேகர் ஆவேசத்துடன் கத்திய செய்தி, இதை நாம் புத்தகத்தில் வாசிக்கும் போது முரண்பாடு தெளிவாக தெரிகின்றது.

5. தந்தி டிவி. மக்கள் முன்னால் அண்ணன் சீமான் நடத்திய நிகழ்ச்சியில் ஆய்வாளர் மோகன்ராஜ் அவர்கள் பேசும்போது டைரியஸ்பீட்டர் மனைவி என் கணவனை வேண்டும் என்றே அழைத்து சென்று, கொன்று விட்டனர் என கூறி அதன் விவரத்தை என்னிடம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள் என்று அவருடைய விலாசத்தையும் கொடுத்து விட்டு அமெரிக்கா சென்று விட்டார். ஆனால் சிறப்பு புலன் விசாரணைக் குழு தலைவர் கார்த்திகேயனுக்கு இச்செய்தி தெரிவிக்கப்பட்ட பின்னரும் அவர் டைரியஸ்பீட்டர் மனைவியை இன்றுவரை விசாரிக்கவில்லை. இச்செய்தியை ரகோத்தம்மன் நன்கு அறிவார். ரகோத்தமன் தன் புத்தகத்தில் கடத்தல்காரர் சண்முகம் வோதாரணியம் பயணியர் விடுதியின் பின்புறத்தில் கைகழுவும் போது தப்பி ஓடினார். அவருடன் ஒரு காவலர் இருந்தார் என்று குறிப்பிடுகின்றார். கார்த்திகேயன் தன் புத்தகத்தில் போலீஸ் நிலையத்தில் இருந்து கைகழுவும் போது தப்பி ஓடினார். அவருடன் ஒரு காவலர் இருந்தார் என குறிப்பிடுகின்றார். இவ்விரண்டிலும் எது உண்மை. நாளைய வரலாற்றில் எந்நிகழ்வு பதிவு செய்யப்படும். நான்கு ஆமைகள் இறந்தால் உயர்நீதிமன்றம் தானாக முன்வந்து விசாரணைக்கு எடுத்து கொள்ளும், ஆனால் நாட்டின் முன்னால் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டுள் ளார். இதை விசாரித்தவர்கள் போதையிலும், பெண் மயக்கத்திலும் வேறுவேறு கருத்துகளைக் கூறுகின்றனர். இதனால் உண்மைக்கு மாறான

நிகழ்வு நடந்து உள்ளது என்று தெரிகின்றது. ஆனால் நீதிமன்றம் இதை கண்டு கொள்ளவில்லை. ஒருவேளை நீதிமன்றம் இதில் தலையிட்டால் தமிழனுக்கு நீதி கிடைத்து விடும் என்ற எண்ணத்தினால் நீதிமன்றம் கூட உண்மையை வெளிகாட்ட மறுக்கின்றதோ, இது தான் இந்தியாவில் தமிழன் நிலையா?

6. விசாரணை குழுவிற்கு ராஜீவ் கொலையாளி சிவராசன் போட்டோ வரும் முன்னே இந்து நாளேட்டில் வெளியானது. எப்படி போட்டோ இந்து நாளேட்டில் வெளியானது என்ற செய்தியை விசாரித்தாலே பின்புலம் யார் என்ற உண்மை உலகத்திற்கு தெரிந்து இருக்கும்.

7. எதிர்க்கட்சி வழக்கறிஞர் ஐயா துரைசாமி அவர்கள் நீதிமன்றத்தில் மரகதம் சந்திரசேகருக்கும், இறந்துபோன சிவராசன், தணு, சுபாவிற்கும் தொடர்பு உண்டு என்று வாதிட்ட போது ரகோத்தம்மன் (விசாரணை குழு விசாரித்த முழு) செய்தியை நீதிமன்றத்தில் தெரிவிக்காமல் மறைத்து குற்றம் செய்தனர். மேலும் ஐயா துரைசாமி மிரட்டப்பட்டார். மான நஷ்டஈடு வழக்கு போடப்படும் என்று.

8. தொழில் அதிபர் ரங்கநாத் வீடு கொடுத்த தற்காக கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படும் போது, சுப்ரமணியசாமியை சம்மந்தப்படுத்தி பேசியதால் பேப்பர் வெளியிட்டால் கார்த்திகேயன் எரிந்த போது அவருடைய முன்பல் இரண்டு உடைந்தது என்று செய்தியை நாம் அறிவோம்.

9. நமது நட்பு நாடு என்று அழைக்கப்படும் இலங்கையில் சிங்கள அரசின் உதவியுடன் இராஜ போக வாழ்க்கை வாழும் (கேபி) குமாரன் பத்பநாபா ராஜீவ்காந்தியின் கொலையில் முக்கிய குற்றவாளி இன்றுவரை (கே.பி) கைது செய்யப்பட்டு இந்தியா கொண்டு வரப்படவில்லை. இவர் நீதிமன்றத்தால் குற்றவாளி என அறிவிக்கப்பட்டவர். இந்திய ஜனநாயகத்தின் முக்கிய அமைப்பு நீதிமன்றம். இங்கு கூறப்படும் கருத்துகளுக்கும் தீர்ப்புகளுக்கும் வலிமை உண்டு. ஆனால் இச்சிக்கலில் எங்கே நீதி?

நீதிமன்றத்திற்கு வெளியே கூறப்படும் எந்தக்கருத்தும் ஏற்கப்படமாட்டாது. ஆகவே முள்ளினை முள்ளால் தான் எடுக்க வேண்டும். ஐயா துரைசாமி அவர்கள் நீதிமன்றத்தில் ரகோத்தம்மன் பேட்டி மற்றும் புத்தகத்தின் அடிப்படை ஆதாரங்களை வைத்து நீதிமன்றத்தில் தான் ஏமாற்றப்பட்ட செய்தியை எடுத்து கூறி நீதிகண்டு இதன் நிமித்தம் தமிழர்களை அழிக்கும் சூழ்ச்சியை முறி அடிக்க வேண்டும் என்று இப்புத்தக வாயிலாக நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் இலங்கையில் நடந்த இனப்படுகொலை யையும், போர் குற்றத்தையும், துரோகச் செயலையும் சேர்த்து ஐ நா மன்றத்தால் பன்னாட்டு விசாரணை குழு விசாரிக்க வேண்டும். இதை ஒவ்வொரு தமிழனும் வலியுறுத்த வேண்டும். இல்லை என்றால் சூழ்ச்சியால் இலங்கையில் தமிழன் அழிக்கப் பட்டது போல நாளை தமிழ் நாட்டிலும் தமிழன் அழிக்கப்படலாம். இன்று இலங்கையில் நாம் பன்னாட்டு விசாரணையை ஏற்படுத்தினால், நாளை இந்தியாவில் உள்ள தமிழனை அளிக்கும் போது சர்வதேசம் நம்மையும், கேள்வி கேட்கும் என இந்தியர்களுக்கு ஒரு அச்ச உணர்வை தேற்றுவிக்கும். அமெரிக்காவில் புலம் பெயர்ந்த சீக்கிய சமுகத்தினர் கொலை செய்யப்பட்ட போது நாடே வெகுண்டு எழுந்தது. ஆனால் எமது மூதாதையர் ஆட்சி செய்த பூமியில் நாங்கள் சென்று அங்கு குடி அமர்ந்தோம். அங்கு எமது கடுமையான உழைப்பாலும், முயற்சியாலும், மாபெரும் வளர்ச்சியை கண்டோம். அவ்வளர்ச்சியைக் கண்ட சிங்களவர் எமது உரிமைகளைப் பறித்தனர்.

எம் மூதாதையர் ஆண்ட பூமியில் நாங்கள் உரிமையோடு வாழ வேண்டும் என்றால், (தமிழ் சமூகம்) சிங்களரை விட்டு பிரிந்து தனியாகத்தான் வாழமுடியும் என்று எண்ணினோம். இதனால் எம் இனத்தையே அழித்தனர். ஆனால் இந்திய அரசு கை கட்டி வேடிக்கை பார்த்தது. சீக்கியனுக்கு ஒரு நீதி, தமிழனுக்கு இன்னொரு நீதி, நேற்று இலங்கையில் நடந்தது நாளை இந்தியாவில் நடக்கும். தமிழர்களே, நாம், நம் நலனை யோசிக்காமல் இருந்தோமானால் நாளை நம் சந்ததி, இப்பூமியில் நலமுடன் வாழ வழியின்றிப் போய்விடும். ஆகவே சிந்தித்து, ஒன்று கூடி, செயல் ஆற்றுவோம், விதியை மதியால் வெல்லுவோம், சதியை களைந்தெழுவோம்.

**தொடரும்...**

# பாடலாசிரியர் கவிபாஸ்கர் திருமணவிழா




திரைப்பட பாடலாசிரியர் **சு. கவிபாஸ்கர் / இரா. செல்வி** தஞ்சை புதிய பேருந்து நிலையம் எதிரிலுள்ள இராமசாமி திருமண மண்டபத்தில் 20.09.2015 ஞாயிறு அன்று, திருமணம் சிறப்புற நடைபெற்றது.

தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன் திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்தார். தாலி மறுத்து, புரோகித சடங்கு மறுத்து, மணமக்கள் இருவரும் ஒருவருக்கொருவர் உறுதிமொழி யேற்று, மாலை மாற்றிக் கொள்ள, திருமணம் நடந் தேறியது.

செந்தமிழ் ஊடகவியலாளர் சங்கத் தலைவரும், முற்றம் மாத இதழில் ஆசிரியருமானஎழுத்தாளர் விசவனூர் வே. தளபதி மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார்.

திருமணத்தோடு, பாவலர் கவிபாஸ்கர் எழுதிய நான்கு நூல்கள் மற்றும் 3 பாடல் குறுந்தகடுகள் வெளி யிடப்பட்டன.

"காற்றில் மிதந்து வருகிறார் கண்ணதாசன்"

"வணக்கம் தோழர்"

"கூட்டாஞ்சோறு"

"போர்த்தொழில்"

ஈழப்பாடல்கள் அடங்கிய "பனைமரக் காற்று"

"நெருப்பின் குரல்"

"உயிரெழுத்து" குழந்தைப் பாடல்கள்

போன்றவை திருமண அரங்கில் வெளியிடப் பட்டன

தமிழ்த் தேசியப் பேரியக்கத்தின் முன்னணிச் செயல் பாட்டாளர்களும், தமிழின உணர்வாளர்களும் நூல்கள் மற்றும் குறுந்தகடுகளின் சிறப்புப் படிகளைப் பெற்றுக் கொண்டனர்.

மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்புத் தலைமை ஒருங்கிணைப்பாளர் முனைவர் த. செயராமன், தமிழர் தேசிய முன்னணி துணைத் தலைவர் வழக்கறிஞர் த. பானுமதி, ஓவியர் கு. புகழேந்தி, திருச்சி-உருமு தனலெட்சுமி கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் கோ. வீரமணி, உலகத் தமிழ்க் கவிஞர் பேரவை தமிழ் மாநிலச் செயலாளர் பாவலர் பூவை சாரதி, இயக்குநர் வெற்றிவேல் சந்திரசேகர், பாவலர் நா. இராசாரகுநாதன், இயக்குநர் சங்கர்சாரதி, கலைஞர் தொலைக்காட்சி கவிஞர் ஜான் தன்ராஜ், நார்வே இராசரத்தினம் பிள்ளை, உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

இயக்குநர் மு. களஞ்சியம், நடிகர் முத்துக்காளை, தோழர் கி.வெங்கட்ராமன், கவிஞர் காசி ஆனந்தன் தோழர் பெ. மணியரசன் ஆகியோர் சிறப்புரையாற்றி னர். நிறைவில், தோழர் கவிபாஸ்கர் ஏற்புரை வழங்கி னார்.

நூல்கள் வெளியீடு அறிஞர்களின் கருத்துரை என மணவிழா, மாநாடு போல நடைபெற்றது. மணமக்கள் நீடு வாழ்க! ●



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**



ஊடகவியலாளர்கள் உரிமைகளைக் காப்போம்!
உலகம் வியக்க ஒன்றாய்த் திரள்வோம்!

# செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கம்

பதிவு எண்: 70 / 2015.



**செய்தி ஊடக நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம். உறுப்பினராகுங்கள், நமக்குரிய உரிமைகளையும் சலுகைகளையும் வென்றெடுப்போம்.**

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமை
மாலை 6 மணிமுதல் 7:40 வரை சங்கக்கூட்டம் நடைபெறும்.

## செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கம்

எண் 124, என். டி. ஆர். தெரு, இரங்கராசபுரம்,
கோடம்பாக்கம், சென்னை 600 024.
தொலைபேசி 044-42154408, அலைபேசி 8056281973.

MUTRAM - Tamil & English Monthly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month

# திரு. நாசர், திரு. கருணாஸ், திரு. பொன்வண்ணன்

## தலைமையில்
## நடிகர் சங்கம் வளர வாழ்த்துகள்!







நட்புடன்....

**விசவனூர் வே.தளபதி**

**சவால் ராம்**